# தாதன் வருகையும் தீப்பளிளைய வரலாறும்



ஆக்கம்:

கவிஞர் வைரமுத்து கனேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதன் வருகையும் தீப்பள்ளைய வரலாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலின் விபரம்

நூலின் பெயர் : தாதன் வருகையும் தீப்பள்ளைய வரலாறும்

நூல் ஆசிரியர் : கவிஞர். வைரமுத்து கணேசன்

ஆலோசனை : முகாமைத்துவம் - இளையதம்பி இராசதுரை

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

பதிப்பு : 2014 புரட்டாதித் திங்கள்

பக்கம் : 80

விலை : 300/=

அச்சுப்பதிப்பு : கோல்டன் அச்சகம், கல்முனை. 067-2223939

வெளியீடு : திரு. க.லவநாதன்
பிரதேசசெயலாளர், பிரதேசசெயலகம், கல்முனை(தமி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Ramakrishana Mission Aharama & Children Homes**
**Batticaloa, Sri Lanka.**
T.P.; 0094 65 2222 752, rkmbat@gmail.com

## வாழ்த்துரை

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண குருதேவரின் திருவருளால் தாங்கள் அனைவரும் நலமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க எல்லாம் வல்ல பகவான் துணைபுரிவாராக.

அம்பாரை மாவட்டத்தில் அமைந்துள்ள, கரைவாகுப்பற்றில் உள்ள பாண்டிருப்புக் கிராமம் பாரம்பரிய பண்பாட்டு மரபுகளும், சுவடுகளும் பதித்துள்ள முதிர்ந்த தமிழ்ப் பிரதேசமாகும்.

இக்கிராமத்தைச் சேர்ந்த கவிஞர்.வைரமுத்து கணேசன் அவர்கள் எழுதிய, "தாதன், கவுத்தன் வருகையும் தீப்பள்ளைய திருப்பதி வரலாறும்" எனும் பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலய வரலாற்றுக் கும்மிப்பாடல்கள் எனும் நூலுக்கு, இவ்வாழ்த்துரையை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கவிஞர் அவர்கள், தனது கவித்துவத்தின் மூலம் பாமரமக்கள் திரௌபதியம்மன் ஆலய வரலாற்றினை அறிந்து கொள்ளும் வகையில், இலகு மொழிநடையில் மேற்படி ஆக்கத்தினை எழுதியுள்ளார்கள். இவரது அரிய முயற்சியை நாம் பாராட்டுகின்றோம். அதேவேளை இவரது படைப்புக்கள் இன்னும் தொடரவேண்டும் என வாழ்த்துகிறோம்.

இந்நூல் வெளியீடு, வெற்றிகரமாக நடந்தேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் இந்நிகழ்வுகளோடு தொடர்புடைய அனைவருக்கும், இறைவன் மேலும் அர்ப்பணிப்போடு கூடிய ஆர்வத்தை வழங்கவேண்டுமென பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரை இறைஞ்சுகின்றேன்.

இறைபணியில்,

சுவாமி கபாலீசானந்தா

(சுவாமி கபாலிசானந்தா)
**SWAMI - IN - CHARGE**
**RAMAKRISHNA MISSION**
**RAMAKRISHNAPURAM,**
**BATTICALOA.**

Please mention your e-mail address in further correspondence.

**This is a branch of the Ramakirishana Mission ; Colombo - 6**
All the official correspondence should be addressed to the General Manager (Swami in-charge)
**Bank:** Bank of Ceylon, **Address:** Govington Road, Batticaloa. **Account Name** : Ashrama,
**Account No.:** 2698511, **Branch ID** : 012, **Bank Swift Code** : BCEYLKLX



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

## கவிக்கோ வெல்லவூர்க்கோபால்

மட்டக்களப்புத் தேசத்திற்கு என்றும் பெருமை சேர்த்துக்கொண்டிருப்பது அதன் அழகியகிராமங்களும் அதில் முகிழ்ந்துகொண்டிருக்கும் கிராமிய இசை வடிவங்களுமே. கள்ளம் கபடம் அறியாத கிராமத்து மக்கள் குறித்து இந்திய அறிஞர் ஸ்ரீ ராரேஜ் ராம் திரிபாடி ஒரு கருத்தைக் கூறுவார். "அம்மக்களுடைய வாக்கில் மூளை இல்லை, இருதயமேயுள்ளது. வணக்கத்தில் கபடம் இல்லை, பச்சாதாபமேயுள்ளது. நட்பில் தன்னலம் இல்லை, அன்பின் நறுமணமேயுள்ளது. அவர்களின் மனவுலகத்தின்கண் சாந்தியும் மகிழ்ச்சியும், அன்பும் கருணையும், தியாகமும் மனநிறைவும், பொறுமையும் நம்பிக்கையுமே உள்ளன. இவர்களது இதயத்திலே வீற்றிருந்து கலைமகள் பாடுகின்றாள்" என்பதேயது. உண்மையில் இம்மக்களது கிராமிய மணங்கமழும் இசை வடிவங்களே கூத்துப்பாடல்களும், காவியம், கும்மி, சிந்து போன்றவையுமாகும். இவற்றிலேயே லயமும் சுவையும் இனிமையும் நிறைந்திருக்கும்.

இத்தேசம் பன்னெடுங்காலமாக பல கிராமியப் புலவர் பெருமக்களால் சிறப்புபெற்றே வந்துள்ளது. அக்கரைப்பற்று மொட்டை வேலாப்போடியார், தாண்டய வேலர், சாகிப் புலவர் காசிம் ஆலிப் புலவர், களுதாவளை சின்னத்தம்பிப் புலவர், செட்டிபாளையம் சின்னவப் புலவர், கணபதிப்பிள்ளை புலவர், மருதமுனை சின்ன ஆலிம் அப்பா, கன்னன்குடா சிதம்பரப்பிள்ளைப் புலவர் என இவர்களை வரிசைப்படுத்திக்கொண்டே போகலாம். பெரும்பாலும் கதைப்பாடல்களாக அமைந்த இவர்களது படைப்புக்கள் வரலாற்று இலக்கியங்களாக மனங்கொள்ளத் தக்கவையாகும். இத்தகைய புலவர்களின் வரிசையில் இன்றும் முக்கிய இடம் பெறுபவர் சேனைக்குடியிருப்பு புலவர் வை.கணேசன் அவர்கள். இதுவரை இவர் காவியம், சிந்து, கும்மியென இருபதுக்கும் மேற்பட்ட படைப்புக்களை தமிழ்கூறும் நல்லுலகிற்கு தந்துள்ளார்.

பாண்டிருப்பு திரௌபதியம்மன் வரலாறு மட்டக்களப்புத் தேசத்து வரலாற்றியலில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுவதாகும். இவ்வரலாறு குறித்து பலர் எழுதியிருக்கின்றனர். மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறும் தாதன் கல்வெட்டும் வாய்மொழி வரலாறுகளும் ஆலயத்தின் பட்டயம் மற்றும் பத்ததி போன்றவற்றையும் ஊர்ப்பெயர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமும் திரௌபதியம்மனின் வரலாற்றினை முன்னிறுத்த உதவுகின்றன. மட்டக்களப்புத் தேசத்தில் திரௌபதியம்மனின் வழிபாட்டினை முதலில் முன்னெடுத்த ஆலயமாக இது விளங்குகின்றது. மட்டக்களப்புத் தேசத்தினை பரிபாலித்த மாருதசேனன் (1520 -1539) எனும் கலிங்க குலத்தைச் சேர்ந்த பங்குடாவெளி கண்ணாப்போடியின் மகனும் தாய்வழிப் பணிக்கர் குலத்தவனுமான எதிர்மன்னசிங்கன் (1540-1580) ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் தமிழகத்தின் கொங்கு நாட்டிலிருந்துவந்த தாதன் நாடகக் குழுவினரால் மகாபாரத நாடகம் பாண்டிருப்பில் நடாத்தப்பட்ட பின்னணியில் திரௌபதியம்மன் வழிபாடு தோற்றம் பெறுகின்றது.

பாண்டிருப்பு திரௌபதியம்மன் வரலாற்றினை புலவர் கணேசன் அவர்கள் எல்லோரும் எழிதாக அறிந்துகொள்ளும் வகையில் இலகு தமிழில் கும்மிப் பாடல்களாக இங்கு தந்துள்ளார். வாய்மொழி வரலாறாக பரவிவந்த சம்பவங்களையே அவர் இங்கு கோவையிடுகின்றார். இனிய தமிழில் சுவைசொட்ட இந்நூலினை அவர் படைத்துள்ள பாங்கு மிகுந்த பாராட்டுக்குரியதாகும். மட்டக்களப்பு தேசத்தின் சிற்றரசனான எதிர் மன்னசிங்கனை நற்பட்டிமுனை வன்னியனாக அவர் அடையாளப்படுத்தியுள்ளமை வாய்மொழி வரலாற்றினை அடியொற்றியதாகவே அமையும்.

கும்மிப் பாடல்கள் கிராமியப் பாடல்களுக்குள் உள்ளடக்கப்பட்டிருப்பினும் இவரது அனேக பாடல்களுக்குள் நர்த்தனமிடும் சொல்வளமிக்க எதுகை மோனை சீர் அசைகளும், சந்தங்களும் படிக்கப்படிக்க ஆவலைத் தூண்டுவதாயுள்ளன. இந்நூலைப் படித்து முடித்ததும் ஒரு சிறப்புவாய்ந்த நமது வரலாற்றினை எளிதில் அறிந்துகொண்ட மனநிறைவு தென்படும்.

**அன்னம் விளையாடும் பொய்கையிலே - நல்ல**
**அழகு கமல மலரமர்ந்து**
**தன்னிக ரில்லாக் கல்விதரும் - என்**
**தாயே சரஸ்வதி வாருமம்மா!.**

இப்பாடலொன்றே போதும் கணேசன் அவர்களது புலமைக்குக் கட்டியம் கூற. புலவர் வை.கணேசன் தொடர்ந்தும் பல ஆக்கங்களை தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**கவிக்கோ வெல்லவூர்க்கோபால்** 12-08-2013
143, எல்லை வீதி, மட்டக்களப்பு. (இலங்கை)
தொ.பேசி: 0094652222993, 0718938367, 0750584427



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## பேராசிரியர் சி.மௌனகுரு

திரு.வைரமுத்து கணேசன் எழுதிய பாண்டிருப்பு திரௌபதையம்மன் வரலாற்றுக்கும்மிப் பாடல்களுக்கு ஒரு முன்னுரை கேட்ட ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ பொன் சுதந்திரன் குருக்கள் எனக்கு வைரமுத்து கணேசனையும் அறிமுகம் செய்து வைத்தார்.

வைரமுத்து கணேசனிடம் உரையாடிய பொழுது அவர் மட்டக்களப்பின் சிற்றூர் கோயில்களின் தெய்வங்கள் பற்றி கும்மிப்பாடல்களும் பத்து என்ற பெயரில் பல பாடல்களும் கவியம் என்ற பெயரில் பல பாடல்களும் எழுதி நூல் வடிவில் வெளியிட்டிருப்பதாகச் சொன்னதுடன் மள மளவென்று பல பாடல்களைப் பாடிக்காட்டவும் ஆரம்பித்துவிட்டார்.

மிகமிக எளிமையான சொற்களில் கும்மிமெட்டில் ஆற்றொழுக்குப்போல அவர் நாவிலிருந்து தமிழ்மொழி பாய்ந்ததை நான் ஆச்சரியத்தோடு செவிமடுத்தேன். மறு நாள் தான் எழுதிய அச்சில் வெளியிட்ட சிறு நூல்கள் பதினொன்றையும் அச்சில் வரவுள்ள கையெழுத்துப் பிரதியில் அமைந்த மூன்று நூல்களையும் என்னிடம் கொணர்ந்து தந்தார். அனைத்தையும் வாசித்தபோது அவர் மீது மிகுந்த மரியாதை ஏற்பட்டது. மட்டக்களப்பின் இலக்கியப் பாரம்பரியத்தை செந்நெறி இலக்கியப் பாரம்பரியம் (Classical literary Tradition) கிராமிய இலக்கியப் பாரம்பரியம் (Fock literary Tradition) இரண்டுக்கும் இடைப்பட்ட இலக்கியப் பாரம்பரியம் (Orature literary Tradition) எனப்பிரிக்கலாம்.

இந்த இடைப்பட்ட இலக்கியப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவை தாம் கூத்து நூல்களும், மட்டக்களப்பு சிறு தெய்வங்களான மாரி, காளி, வதனமார், பேச்சி, கண்ணகி முதலான தெய்வங்கள் பற்றி எழுந்த காவியங்களும் பாடல்களும். இம்மரபுதான் மட்டக்களப்பின் பிரதான இலக்கிய மரபுபோல எனக்குப்படுகிறது. இது எளிமையானது இலகுவானது மக்கள் மயப்பட்டது இம்மரபில் பல புலவர்கள் நம்முன் இருந்துள்ளனர். அம்மரபின் வாரிசாக இன்று நம்முன் வாழும் புலவர்தான் வை.கணேசன் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசன் அவர்கள் பல வகையான பாடல்களைப் பாடினாலும் கும்மி மெட்டு அவருக்குக் கைவந்த கலையாக உள்ளது. தனது பிரசுரமொன்றில் திக்கு வாயனான தான் இருந்த போது அம்மன் கோயிலில் பாளை விற்கப் போவதனை ஒலிபெருக்கியில் அறிவிக்க எதிர்பாராத விதமாக மைக்கைத் தந்தபோது தன் திக்குவாய்தனமெல்லாம் ஒழிந்து சரளமாகப் பேச ஆரம்பித்ததையும் பரவசத்துடன் கூறினார்.

தான் பாடுவது அம்மன் அருளால் என அவர் திடமாக நம்புகிறார். நம்பிக்கைதானே வாழ்க்கை இன்று உளவளச் சிகிச்சையின் நோய் தீர முறைகளால் திக்குவாய் மறதி, பயம், பதகளிப்பு, வலி முதலான நோய்களைத் தீர்க்கும் வைத்திய முறைகள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டனவாயினும், இன்று வரை சாதாரண மக்கள் மத்தியில் நமது தெய்வம் ஆகும். சிற்றூர்க் கோயில்கள் இந்த உளவளச் சிகிச்சையினை வருடம் தோறும் அளித்து வருகின்றன என்பதைப் பலரும் புரிந்து கொள்வதில்லை.

கணேசன் வாய்மொழிக்கதைகளிலிருந்தும் நூல்களிலிருந்தும் கதைகளைப் பெற்றுக் கொள்கிறார். பின்பு அவற்றைத் தாம் வயமாக்கி தமக்கு வாசாயமான கும்மிமெட்டில் தாம் அறிந்த சொற்களஞ்சியத்தினூடாக வெளிப்படுத்துகிறார்.

இவ்வகையில் பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயில் வரலாறு பற்றி தாம் பலரிடமும் கேட்டறிந்த தகவல்களை மையமாகக் கொண்டு இங்கு ஒரு வித்தியாசமான அல்லது புதிய வரலாறு ஒன்றை எமக்குத் தருகிறார். தானும் அவன் தம்பியும் திரௌபதையம்மன் வழிபாட்டை மட்டக்களப்புக்கு கொணர்ந்த ஒரு நிகழ்வு பூர்வ சரித்திரமும் பதிந்துள்ளன. ஆனால் இந்த நிகழ்வுகள் பற்றி பல்வேறு கதைகள் பார்வைகள் உள்ளன.

இந்த நிகழ்வில் ஈடுபட்ட ஒவ்வொரு சமூகமும் தத்தமக்கென ஒவ்வொரு பார்வை வைத்துள்ளன. அப்பார்வைகள் இன்னும் எழுத்தில் பதியப்படவில்லை. அப்பார்வைகள் அனைத்தையும் ஒன்று திரட்டும் போது பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயில் வரலாறு பற்றிய ஓர் உண்மை வரலாறு மேற்கிளம்பும் சரித்திரமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலய வரலாற்றுக்குக் கும்மிப் பாடல்களில் மக்களிடையே ஆலயம் சம்பந்தமாக வழங்கிருந்த வாய்மொழி மரபை ஆசிரியர் ஆதாரமாகக் கொள்கிறார்.

எழுதப்பட்ட அல்லது மேட்டிகை நிலையினின்றும் கூறப்படும் வரலாற்றை தகவல்களை விட மிகச் சாதாரணமான அடிமட்ட மக்களிடம் வழங்கும் தகவல்கள் மிகப் பிரதானமானவை என்று புதிய சரித்திரவியல் எமக்கும் கூறுகிறது. அவ்வகையில் இக்கும்மி நூலில் தாதன் தன் தம்பியுடன் கிழக்கிலங்கை வந்து எதிர்மன்னசிங்க மன்னனைச் சந்தித்ததும் திரௌபதை வழிபாடு நடத்த தகுந்த இடமாக பாண்டிருப்பையும் அதன் அயல் கிராமங்களையும் தேர்ந்தெடுத்ததும் எல்லாச் சமூகத்தவரும் பங்கு கொள்ளக் கூடிய விதமாக அச்சடங்கை உருவாக்கியதும், சடங்கில் பங்கு கொள்ளும் பாத்திரங்களுக்கு ஒவ்வொரு சமூகத்தவரை நியமித்ததும், தன்னை விட்டுப் பிரிந்து சென்ற தம்பியையும் அச்சடங்கினுள் ஈர்த்துக் கொண்டதும், அச்சடங்கினை சிறப்பாக செய்து முடித்ததும் எனப் பெரிய வரலாறு ஒன்று கூறப்படுகிறது. ஒரு பெரும் சடங்காக நடைபெறும் கிழக்கிலங்கையின் பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் சடங்கிற்கான விதைகள் பல தலை முறைகளுக்கு முன்னர் எவ்வாறு ஊன்றப்பட்டன என்ற தகவல்கள் இதன் மூலம் கிடைக்கின்றன.

இங்கு எனக்குச் சிறப்பாகத் தெரிவது என்னவெனில் மக்களிடையே ஏற்படுத்தப்பட்ட ஒற்றுமைதான் சாதிகளாகவும், பிரதேசங்களாகவும், குழுக்களாகவும் பிரிந்து கிடந்த மக்கள் அனைவருக்கும் உரியதான இடமாகவும், விழாவாகவும் அமைத்த தாதனின் உயர் நோக்கு எம்மை மிகவும் கவர்கிறது.

வை.கணேசன் தனது கும்மி பாடலில் அழகாக இதனைத் தருகிறார். பாண்டிருப்போர் கொலுவமைய இங்கு பன்னிரண்டு குலத்தார் சேர வேண்டும் என்கிறான் தாதன். பன்னிரண்டு குலத்துக்கு என்ன செய்வது அங்கு முன்னரேயே வாழ்ந்து வந்த குலங்களை கணக்கிடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்குலம் பணிக்கனா குலத்தாரும் மற்ற முதுமை கொள்வேளாள குலத்தாரும், மங்காப்புகழ் கொண்ட ஆச்சாரி குலம் இன்னும் மனமுள்ள சாணார் குலத்தாரும், சரியானபரிகாரி குலத்தாரும். மற்ற தண்டக்காரன் குலம் தான்சேர்த்த போது 6 குலம் தான் அகப்பட்டது. மற்ற ஆறு குலத்துக்கு எங்கு போவது? சாய்ந்தமருதுவில் வாழ்ந்து வரும் அந்த சந்தோஷமான மூப்பர் குலம் தூய்மையால் தம்பிலுவில் வாழும் சுத்தப்பிராமணர் குலத்தையும். சேர்த்தபோதுஎட்டுக்குலம்தான் வந்தது. இன்னும் நாலு குலத்துக்கான தெரிவில் தாதனைஒருகுலமாகவும்,தாதன் தம்பிஒருகுலம் ஆலயம் கட்ட இடமளித்த அழகப்பன் ஒருகுலம் பலபேரும் சேர்த்து ஒருகுலம் மொத்தமாக 12 குலம் என வகிக்கின்றனர்.

இந்த ஆச்சாரி - சாணார் - மூப்பன், பரிகாரி என பல்வேறுபடி நிலைகளிலுள்ள சமூகத்தவரும் இணைக்கப்படுதல் கவனிக்கத்தக்கது. மக்கள் எப்போதும் ஒற்றுமையையே விரும்பினார்கள். அனைவரும் பேதமின்றி ஒன்றிணைந்து வாழவே விரும்பினார்கள் என்ற உன்னத நோக்கே இப்பன்னிரண்டு குலச்சேர்க்கையில் காணப்படுகின்றது.

இந்த இணைப்பு பல்வேறு வாதப்பிரதிவாதங்களுக்குப் பின்தான் சாத்தியமாகின்றது. ஆலயம் கட்டஅழகப்பன் என்ன குலம்என இங்கு குறிப்பிடப்படவில்லை. எனினும் அம்முடிவைச் சிலர் எதிர்த்ததாகவும் பின் ஏற்றதாகவும் ஆசிரியர் கூறுகின்றார்.

மக்களை சாதி பேதமின்றி ஒன்றிணைத்த திரௌபதையம்மன் வழிபாட்டுச் சடங்கு முறைகளிலும் ஒன்றிணைகின்றது. ஆரம்பக் கொடியேற்றப் பூசை ஆலய நிர்வாகத்திற்கு 6ம் நாள் வரைபூசை முக்குலக்குடியினரும், 7ம் நாள் பூசைச்செட்டி வேளாளருக்கும் கல்யாணக்கால் வெட்டும் பூசை முக்குலப் பணிக்கடை குடியினர்க்கும் தோரணைப் பூசை வீரச்சோலை வேளாளருக்கும் அதைஅலங்காரம் செய்யும் உரிமை மருத்துவக்குலத்தாருக்கும் மௌன பூசை சலவைத் தொழிலாளருக்கும் பாண்டவர் பாஞ்சாலிவனவாசம் செய்யும் பூசை சான்றார் குலத்தாருக்கும் தவநிலை ஆச்சாரி பத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்தாருக்கும், தீமிதித்தல் பால்பள்ளயம் தர்மருக்கு முடி சூட்டல் நிர்வாகசபைக்கும், வரத்தக்கதாக அமைக்கப்பட்டதென இக்கும்மிப்பாடல்கள் மூலம் அறிகிறேன்.

**இன்றுபோல் அன்றும் குழறுபடி - அங்கே**
**ஆரம்பமாகி இருந்தாலும்**
**வன்னியனார் சொல்லுக்கு தலை சாய்த்து சபை**
**மனநிறைவோடு ஏற்றது.**

என்கிறார் இக்கும்மிப்பாடல் ஆசிரியர். இங்கு உணர்த்தப்படும் செய்தியாதெனில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்த அனைத்து சமூக மக்களும் ஒன்றினைவதான வகையில் ஆலய பூசை முறைகளும் நடைமுறைகளும் கட்டமைப்புக்களும் என்பதேயாகும்.

ஒற்றுமையாக வாழும் இந்த வகையை நம் முன்னோரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த வாய்மொழிக்கு ஒரு வரலாறும் ஆசிரியர் கூறுகிறார்.பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலய வரலாறு பற்றிய வரலாறு இது இன்னும் பல வரலாறுகள் இருக்கவும் கூடும் அனைத்தையும் திரட்டி ஆராய்ந்து உண்மை காணல் ஆய்வாளரின் கடமையாகும். கும்மிப்பாடலாக இருக்கும் அதே வேளை சிந்தனையைத் தூண்டுகின்ற வரலாற்று ஆவணமாகவும் இவை இருப்பது இந்நூலின் ஒரு சிறப்பம்சமாகும்.

புலவர் கணேசனுக்கு மட்டக்களப்பு மக்கள் இலக்கிய வரலாற்றில் ஒரு இடம் இருக்கும். இத்துறையில் அவர் இன்னும் முயற்சிக்க வேண்டுமென்பதே எனது அவா. அவர் பிரசுர முயற்சிகளில் இது சம்பந்தமான நிபுணர்களிடம் ஆலோசனை பெறுதல் அவர் வெளியீடுகள் அழகாகவும் சிறப்பாகவும் அமைய என் வாழ்த்துக்கள்.

பேராசிரியர் சி.மௌனகுரு

31.08.2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசான சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. பொன். சுதந்திரன் குருக்கள்
சித்த ஆயுள்வேத, முறிவு வைத்தியர், சோதிடர்
பதிவு இலக்கம் : HA/4/2/1C/574
திருவள்ளுவர் வீதி, பாண்டிருப்பு-01, கல்முனை.

# குரு ஆசியுரை

## தாதன் வருகையும் தீப்பள்ளய திருப்பதிக வரலாறும்

நெய்தலும் மருதமும் நிரம்பத்ததும்பும்
நிலம் பூத்த பாண்டிருப்புப் பதிதனில்
நித்தம் மணம் வீசும் நிழல்பனிச் சோலையில்
பத்ததி பூசனையாம் பாஞ்சாலி தேவிக்கு
பக்தியுடன் பதினெட்டு நாள்தனிலே
பஞ்சபாண்டவர்க்கு பரவசமாய் கொலு வைத்து
பாராளந்த பரந்தாமன் பக்கத்தருகிருந்து
பக்தர் துயர் தீர்த்திலங்க பாண்டவர் பத்தினியின்
கோயில் கொண்டருளும் கோலவிழிப் பார்வையினை
தாதன் கௌத்தன் தனையன் இருபேரும்
தானிருக்கும் நிலையினை தக்க வைக்கவென்று
தனியிடம் தேடி தனிப்பட்டு நிற்கையிலே
கலிங்கத்து ராஜன் எதிர்மன்ன சிங்கனின்
செப்பனிட்ட வருகையின் கோட்டத்து
ஆதாரங்களையும் பதினெட்டு நாட்களுக்கான
பத்ததி பக்திச் சிறப்பினையும் பக்தர்களுக்கு
"தாதன் வருகையும் தீப்பள்ளய திருப்பதிக வரலாறும்"
எனும் நூல் சிந்து வெளிப்பாடல் பதிப்பாக
சேனைக்குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த
கவிஞர் வைரமுத்து கணேசன் அவர்களின்
கவித்துவத்தினால் நூலுருவாக்கம் பெற்றிருக்கும் இந்நூல்
காலத்தால் அழியாத பாண்டிருப்பு திரௌபதை அம்மன்
தீப்பள்ளய திருப்பதிக பூர்வீக வரலாற்றை
நூலாக வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.
இது போன்ற இவரால் வெளியிடப்படும் ஆக்கங்களை
மென்மேலும் சிறப்புற விளங்க
எனது இனிய குரு ஆசிகள் நிறைந்திலங்கட்டும்.

இவ்வண்ணம்

**ஸ்ரீ சித்திர வேலாயுதர் தேவஸ்தானம்**
**பிரதமகுரு**

Easana Sivachariyar
The United Organisation of all Communities
Samasri . Pon. Suthanthiran Priest
Sidda Ayurvedic Physician
Thiruvalluvar Road, Pandiruppu - 01,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசிகள்

அன்னை திரௌபதியின் அருமைதனை
அன்பர் வைரமுத்து கணேசன் அவர்கள்
அர்த்தமுள்ள கவிதைகளாய் வள்ளுவர் தந்த பெரும்
குறள்வடிவில் வடிவமைத்து வளுவாது
குவலயத்தோர் அறியத் தந்துள்ளமை - அவர்
தாதன் வகுத்த வழிமுறைகளை மீண்டும்
உணர்த்தியுள்ளார். குடிமுறைமைகள் சாகிய
வழிகளின் கடமைகள் பெருமைகள் இளம்
சந்ததியினரும் அறிந்து கொண்டு ஆலயத்தில்
வாஞ்சையுடன் வழிபட்டு உய்ய அன்னையின்
வரலாறுகள் மகிழ்ச்சியும் பெருமையும் தருகின்றது.

பதினெட்டு நாட்கள் பாரதப் போரின் பாண்டவர்
பட்டவை வரலாறுகள் என்றாலும் இன்றைய
மனிதகுல உறவுகளிலுள்ள குடும்பப் பிணக்குகள்
மண்ணுக்காக மடிந்த வரலாற்று உண்மைகள்
அன்றைய சகோதர சண்டைகள் இன்றும்
தொடரும் அல்லல் நிறைந்த வாழ்வை
தொட்டுக்காட்டி வருவதும், நீதி, நேர்மை,
சத்தியம் என்றும் இருப்பதை உணர்த்துகிறது.
தாதன் முனிவரது சக்திகள் இன்றும் இருப்பதை
அருள் வளங்கும் ஆலயமாக ஸ்ரீதிரௌபதியம்மன்
ஆலயம் இருப்பது கண் கூடாகும்.

**எனவே சகலரும் வாசித்து பலன் அடைய வேண்டும்**
**என்பதே எனது நல்லாசிகளாகும்.**

*இவ்வண்ணம்*
**சிவஸ்ரீ க.ஐ.யோகராசா ஐயர்** பிரதம குருக்கள்
சிவன் ஆலயம்
பாண்டிருப்பு-01, கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்த்துரை

ஈழமணித் திருநாட்டின் கிழக்கே, மட்டுமாநகரின் தெற்கே 25ஆவது மைல்கல் தொலைவில் பாண்டிருப்பு பதியிலே வீற்றிருந்து அருளாட்சி புரியும் அன்னை பராசக்தி ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயம் அமைந்திருக்கின்றது.

இந்த ஆலயம் 16ம் நூற்றாண்டளவில் ஈழநாட்டிற்கு யாத்திரையாக வந்து தென்காசிப் பதியிலே தங்கி சித்திர வேலாயுதர் சுவாமி தீர்த்தமாடி அங்கேயே தங்கியிருந்து மகாபாரதக் கதையை எடுத்தோதிய தாதன் கௌந்தன் இன்னும் அவர்களது நண்பர்கள் செய்த பக்தி விசுவாசங்களைக் கண்ட ஊர்மக்கள். அப்போது கிழக்கிலங்கையை பரிபாலனம் செய்த எதிர்மன்ன சிங்கனெனும் சிற்றரசனிடம் கூற அவர் அங்கு சென்றதுடன் அவர்களுடன் பேசியதும் அதன்பின் நடந்த கதைகளையும் கவிஞர் வைரமுத்து கணேசன் அவர்கள் நூலாக வடித்ததைக் கண்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நான் சுமார் 25 வருட காலமாக திரௌபதியம்மன் ஆலய பரிபாலன சபையில் பொருளாளராகவும் உபதலைவராகவும், தற்போது தலைவராகவும் இருந்து வருகின்றேன். எனவே இப்படியானதொரு நூல் வெளி வருவதையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

வன்னிப்பணிக்கனாகுடி. இப்படிக்கு

நாகமணிப்போடி இராஜேந்திரம்

**ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார், ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயங்களின்**
**பரிபாலன சபைத் தலைவர்**
பாண்டிருப்பு-01.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

**அன்பான வாசகப் பெருமக்களுக்கு எனது பணிவான வணக்கம்!**

நான் இதுவரை நமது இஷ்ட குல தெய்வங்கள் மீது சிறு சிறு பாடல்களை எழுதி நூல்வடிவமாக்கி உங்கள் கரங்களில் தவள விட்டிருக்கிறேன்.

ஆனால் இப்போது தாதன் வருகையும் தீப்பள்ளய வரலாறும் என்னும் நூலை உருவாக்கி உங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்

இது எனது நீண்டநாள் ஆசை இதன் வரலாற்றினை தேடி நான் எங்கெல்லாமோ அலைந்தேன். இறுதியில் பாண்டிருப்பு இளையதம்பி இராசதுரை என்பவரிடம் மதிப்பிற்குரிய ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ பொன் சுதந்திரன் குருக்கள் ஐயா அவர்கள் என்னை அவரிடம் அழைத்துச் சென்றார். அதற்கு எதுவித மறுப்பும் தெரிவிக்காமல் எனக்கு இக்கதையைச் சொன்னார். நான் அதை கொஞ்சம் கொஞ்சமாகக் கேட்டு கவிதையாக்கி கும்மிப்பாடல்களாய் வடித்துள்ளேன் இப்பாடல்களை உற்று நோக்கி எனக்கு ஆசியுரை, அணிந்துரை, வாழ்த்துரை, தந்த கவிக்கோ வெல்லவூர் கோபால் ஐயா அவர்கள் இராமகிருஸ்ணமிஷன் சுவாமி அவர்கள். மதிப்பிற்குரிய பேராசிரியர் மௌனகுரு ஐயா அவர்கட்கும். நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். மற்றும் இதனை நூல் வடிவமாக்கி வெளியிடவேண்டும் என்று முழுமூச்சாக ஒத்துழைப்பு வழங்கிய மதிப்புக்குரிய பிரதேச செயலாளர் திரு.க.லவநாதன் ஐயா அவர்களை மிகவும் பாராட்டுகின்றேன். இன்னும் நான் சொல்லப் போனால் எவ்வளவோ சிரமத்திற்கு மத்தியில் எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ பொன் சுதந்திரன் குருக்கள் ஐயா அவர்கட்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டவனாவேன்.

அத்தோடு அறியாத நான் வரைந்த இந்த ஆதி வரலாற்றில் ஏதும் குற்றம் குறைகள் இருப்பின் கற்றறிந்தோர் மன்னிக்க வேண்டும் என்பதோடு நான் அறியாததை எனக்கு எடுத்துரைக்க வேண்டும் என மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



இப்படிக்கு
**வைரமுத்து கணேசன்**
கலைமகள் வீதி,
சேனைக்குடியிருப்பு-02,
கல்முனை.
0719238566



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

- ஊத்துக் குளக்கரை ஓரத்திலே –வந்து
உட்கார்ந்திருந்து அருள் வழங்கி
காத்து ரட்சிக்கும் கரிமுகனாம் -எங்கள்
கணபதி பாதம் காப்போமே.

- கண்ணுக்குக் கண்ணாய் வீற்றிருக்கும் - எங்கள்
கண்மணி மாணிக்கப் பிள்ளையாரே
உன்னிருபாதம் நான்பணிந்தேன் - எனக்
குற்ற துணையாக வாருமையா

- அன்னம் விளையாடும் பொய்கையிலே - நல்ல
அழகுகமல மலரமர்ந்து
தன்னிகரில்லாக் கல்வி தரும் - என்
தாயே சரஸ்வதி வாருமம்மா

- அகிலவுலகும் காப்பதற்கு – அன்று
அள்ளியே நஞ்சுண்டகாரணனே
புவியில் முன்னாள் நடந்தகதை - கூற
புண்ணியனே அருள்தாருமையா

- மச்சவுருவம் தானெடுத்து – அன்று
மங்காமல் வேதத்தைக் காத்தவனே
அச்சுதனே பச்சைமாயவனே – எம்மை
அருட்கண்ணால் பார்த்திடவாருமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதன் வருகையும்

## தீப்பள்ளைய வரலாறும்

## நூல்

01. அருச்சுணன் தனக்கு மாலையிட்டு – அன்று
ஐவர்க்கும் துணையாய்த் தான்வாழ்ந்து
துரியன் சபையில் துகிலுரிய – அந்த
தூயவன் மானமும் தான்காத்து

02. பனிரெண்டு ஆண்டுவனவாசம் - செய்து
பட்டதுயரெல்லாம் நன்மையென்று
இனிதாக ஓராண்டு மறைந்திருந்தும் - பின்னர்
ஈகுந்த இடமும் தரமறுக்க

03. பாரதப் போரும் தான்சூழ – அது
பதினெட்டு நாளும்தான் நடக்க
வீரசபதம் நிறைவேற்றி – பின்பு
விருப்பம்போல் குழலும்தான் முடித்து

04. இந்திரஸ்ப்பதி தாங்கள் சென்று – அங்கே
இன்புற்று வாழ்ந்த கதைவரைக்கும்
இத்தரைமாந்தர்க்கு உணர்த்தவென்று – அன்று
இதயத்தில் கொண்ட தாதனவன்

05. என்னென்ன பொருட்கள் தேவையென்று – அவர்
எண்ணம்போல் எல்லாம் சேகரித்து
தன்திட்டம் நிறைவேற வேண்டுமென்று – அன்று
தன்னுள்ளே கொண்ட பக்தியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. தம்பிகவுந்தனைச் சேர்த்தெடுத்து - இன்னும்
தன்னோடிணைந்த நண்பர்களும்
நம்பிக்கையோடு கலமேறி – வந்து
நலமாக ஈழநாடடைந்து

07. ஈழத்தின் தென்காசிப் பதிசேர்ந்து – பின்பு
இறையடிதொழுது நமஸ்கரித்து
ஆழியில் தீர்த்தமும் தாமாடி – அவர்
அங்கே சிலநாள் இருக்கையிலே

08. தாவடியொன்று தாமமைத்து – அதில்
தசாவதாரத்து நாயகனை
நாவாரத்துதித்து அருள்வேண்டி – அங்கே
நாள் தோறும் பூசை செய்கையிலே

09. பாரதநாட்டில் இருந்துவந்தோர் - நீங்கள்
பலநாள்தங்கும் காரணத்தை
உரைப்பீர்நாமும் அறிவதற்கு – என்று
ஊர்மக்கள் கேட்கத்தாதனுமே

10. உங்கள் தலைவரைக் காணவேண்டும் - நாங்கள்
உள்ளதை அவரிடம் சொல்ல வேண்டும்
எங்களைக் காண ஓர்வசனம் - நீங்கள்
எடுத்தியம்புவீர் அவருக்கென்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அப்பவே செய்தியைக் கேட்ட மக்கள் - இதை
அவரிடம் சொல்ல வேண்டுமென்று
நாப்புட்டிமுனையைத்தானோக்கி – அப்போ
நடந்துவந்து சேர்ந்தனரே

12. கரைவாகுப்பற்றுக்கு மேற்கினிலே – அன்று
கண்ணியமிக்க வன்னிமையின்
பரம்பரைதன்னில் வந்துதித்த – அந்த
பழம்தமிழ் எதிர்மன்ன சிங்கனிடம்

13. வந்தசிலபேர் எடுத்துரைக்க – அதை
வளமாகக் கேட்டவன்னியனார்
சிந்தித்து நானங்கு செல்லுகிறேன் - என்று
சிறந்த உத்தாரம் தான்வழங்கி

14. கரிகள் பூட்டிய வண்டியிலே – அவர்
கச்சிதமாகத் தானமர்ந்து
கரிமுகன்தம்பி வீற்றிருக்கும் - தென்
காசிப்பதியைத் தானடைந்து

15. கதிவேலர்பாதம் தாம்பணிந்து – அவர்
கடமையெல்லாம் தான்முடித்து
புதிதாகக்கண்ட தாதனிடம் - அவர்
புன்னகையோடு தாம்வினவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பாராழும் தலைவரே நமஸ்க்காரம் - நாங்கள்
பாரத நாட்டைச் சேர்ந்தவர்கள்
தீராத காதலால் தென்காசி – வந்து
தீர்த்தமும் ஆடி முடித்துவிட்டோம்

17. என்பெயர் தாதன் என்தம்பியிவன் - நாமம்
ஏற்ற கவுந்தன் எனமொழிந்து
நண்பர்கள் இவர்கள் கூடவந்தோர் - என்று
நல்லபடியே எடுத்துரைத்து

18. இங்குதங்கும் நோக்கம் என்னவென்று – நான்
எடுத்தியம்புவேன் கேழுமென்று
தாங்கள் வந்த நோக்கம் இன்னதென்று –அந்த
தாதனும் எடுத்துச் சொல்லலுற்றார்

19. வியாசமுனிவர் தான்புகல – அன்று
விநாயகர் கோடுடைத்தெழுதிவைத்த
தேசம்புகழ் மகா பாரதத்தில் - பெரும்
சொல்லொனா இன்னல் அனுபவித்து

20. பஞ்சவர் பாஞ்சாலி எல்லோரும் - அன்று
பாவிதுரியனால் நாடிழந்து
அஞ்சாமல் வனவாசம் சென்றதுவும் - பின்பு
அஞ்ஞாதவாசம் கழித்துதவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. அருச்சுணன் பாசுபதம் பெற்றதுவும் - பின்பு
அரவானை களப்பலி இட்டதுவும்
விருப்போடு அக்கினி குழித்ததுவும் - எல்லாம்
விளம்புவேன் நானும் தெளிவாக

22. கொடியேற்றி பதினெட்டு நாள்வரைக்கும் - இது
கொஞ்சமும் பிசகாமல் செய்யவேண்டும்
முடியும்வரை நான் நடத்திவைத்தால் - அதன்
முக்தியைப் பக்தர் அனுபவிப்பார்.

23. அதனை நானும் எடுத்துரைக்க - அங்கே
ஆழியும் ஆலும் அமைந்தஇடம்
இதமான வனமும் வயல்வெளியும் - இன்னும்
இருக்கவேண்டும் வாவியென்றார்

24. அனைத்தையும் எதிர்மன்ன சிங்கனவர் - மிக
அன்பாக உற்றுக் கேட்டிருந்து
இணையில்லாப் பழங்கதை கேட்டதற்கு — என்
இதயம்மகிழ்ந்தது என்றுரைத்து

25. தன்மக்கள் தன்னில் சிலபேரை — அவர்
தாதனுடன் நீங்கள் வாருமென்று
அன்போடு மரக்கலம் தனிலேற்றி - இனி
அங்கேவந்து சேருமென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. இன்பமாய் எல்லோரும் அலைகடலில் - அப்போ
இனிதாகப்பேசி மிதந்துவந்து
தென்னைமரவாடி தனிலிறங்கி — அங்கு
சீரும்சிறப்பெலாம் பார்த்துக்கொண்டு

27. வடயதெருவிலே தான் நடந்து — அன்று
வந்தார்கள் நாப்புட்டிமுனைநாடி
கடமையைப் பெரிதாய் தாம்நினைக்கும் - அந்த
கண்ணியமிக்க வன்னியனார்.

28. தாதனும்கவுந்தனும் மற்றோர்க்கும் - அவர்
தக்கமரியாதை தாம்கொடுத்து
ஆதரவாக வரவேற்று — நீங்கள்
அமருங்கள் என்று தானமர்த்தி

29. செய்யும் விருந்து உபசாரம் - எல்லாம்
செய்துமுடித்து மகிழவைத்து
செய்யும் கடமைசெய்யவென்று — அவர்
செய்தி அனுப்பினார் திக்கெங்கும்

30. கரைவாகுப்பற்று சம்மாந்துறை — மற்ற
காரைதீவு சேனைக்குடியிருப்பு
துறைநீலாவணை வடயதெரு — என்று
தூயதமிழ்பேசும் ஊரிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. போடிமார் தலைவர்கள் எல்லோரும் - நாளை
பொதுவான விஷயம் இருப்பதனால்
விடிந்ததும் வந்து சேரவேண்டும் - என்று
விளக்கமாய்த்தூது அனுப்பினாரே.

32. செய்தியைக் கேட்டதும் எல்லோரும் - வந்து
சேர்ந்தார்கள் பொழுது புலர்ந்ததுமே
ஐயாவனியனார் தாமழைத்த – செய்தி
அறியவந்து கூடினதும்

33. பாரத நாட்டிலே முன்னாளில் - அந்த
பஞ்சவர் பாஞ்சாலி பட்டதுயர்
பாரினில் அனைவர்க்கும் உணர்த்தவேண்டும்- என்ற
பக்தியால் இங்கே வருகைதந்து

34. அதனை இங்கே எடுத்துணர்த்த – அவர்
அழகான ஆலை அரசோடு
இதமான புங்கை புளியமரம் - இன்னும்
இயல்பாக அமைந்த ஆழியோடு.

35. வயல்நிலம் குளக்கரை எல்லாமும் - நன்கு
வாய்ந்த இடம்மெங்கு இருக்குதென்று
சுயமாக எடுத்து இயம்பவேண்டும் - என்று
செப்பியவார்த்தை கேட்டதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. வடயதெருவுப் போடியாரும் - அப்போ
வன்னியனார்க்கு நன்றிசொல்லி
கிடக்குதுவெம்பு ஒருபகுதி – அங்கே
கீழ்க் காணும் வனமும் நிறைந்திருக்கு

37. உங்கள்விருப்பம் எப்படியோ – நீங்கள்
உடனேவந்து பார்வையிட்டு
தங்கள் மனதுக்குப் பிடித்திருந்தால் - அதை
தாங்களே தெரிவு செய்யுமென்றார்.

38. வன்னியனாரும் அதைக்கேட்டு – அங்கே
வந்ததாதனும் மற்றோர்க்கும்
சென்றுபார்த்து வாருமென்று – அவர்
சேர்ந்தபலபேரைத் தான்பணிக்க

39. இந்த நிமிசமே நாங்கள் சென்று – அதை
இப்போதறிந்து வருவோமென்று
சந்தோஷமாகத் தாதனங்கு - வந்து
சரியான சோலையைக் கண்டனரே

40. ஆலை அரசு கொக்கட்டியும் -நல்ல
அழகான கருங்காலி நாவலோடு
இலை கிளையுள்ள பலமரமும் - அங்கே
இருக்க கண்டு அகமகிழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. அழகான சோலை வனம்கண்டோம் - இனி
அடுத்த தேவையும் என்னவென்று
வளம் பார்ப்போமென்று சொல்லி – மக்கள்
வாழும் இடமெல்லாம் பார்த்தனரே

42. மா பலா வாழை தென்னையோடு – மற்ற
மாதுழைதோடை எலுமிச்சையும்
அமைவாக இங்கே நிறைந்திருக்கு - இனி
அதுவும் நன்று என நினைத்து

43. பக்கத்தில் மக்கள் இருப்பதனால் - இந்த
பகுதியும் யாருக்கோ சொந்தமென்று
அக்கணமே தாதன் தானுணர்ந்து – அதை
அங்குள்ள பெரியோரிடம் வினவ

44. இந்த இடத்துக்கு சொந்தக்காரன் - சாமி
இப்போதுயிங்கே இல்லையவர்
அந்தநாளில் இவ்விடம் விட்டு - அவர்
அநேக தூரம் சென்றுவிட்டார்.

45. போனவன் எங்கேயும் போய்விடட்டும் - நாம்
பொன்னான இடத்தைக் கண்டுகொண்டோம்
கானகம் நன்றாய் அமைந்திருக்கு - இங்கு
கருணை மனமும் நிறைந்திருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. அடியேன் நினைத்து வந்தது போல் - இங்கு
ஆலை அரசு கொக்கட்டியும்
முடிவைத்த காட்சி போல் அமைந்திருக்கு - இது
மிகமிக முக்கியம் நமக்கென்று

47. கொண்டுள்ள என்திட்டம் நிறைவேற - அம்மா
கோதை திரௌபதித்தாயாரே
எண்ணம் போல நீ சேர்க்க வேண்டும் - என்று
எண்ணி மனமும் மிகவுருகி

48. அன்னையே அன்று நான் நினைத்தது போல் - இந்த
ஆழிகடந்து வந்தாலும்
பொன்னான இடமொன்று தந்தாயம்மா - இங்கு
புதுமை இன்னும் நிறைந்திருக்கு

49. மக்கள் இருந்து களையாற - நல்ல
மணல்தரை நன்றாய் அமைந்திருக்கு
எக்காலும் அழியாத்தல விருட்சம் - அம்மா
எல்லாமே நன்றாய் அமைந்திருக்கு

50. புங்கை புளியை காரை மரம் - இன்னும்
புன்னகை பூத்த செடிகொடிகள்
எங்கும் நிறைந்து இருக்குதம்மா - என்
எண்ணம் குதூகலம் காணுதம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. பாரத நாட்டை விட்டு வந்து - இந்த
பண்பான ஈழநாட்டினிலே
சேராத செல்வம் அத்தனையும் - இங்கு
சேர்ந்த இடம்தனைக் கண்டேனம்மா

52. சீராக உனக்கோர் ஆலயத்தை - நானும்
சிறப்பாகச் செய்து முடியும் மட்டும்
நேராக என்னை நிலை நிறுத்தி - என்
நெஞ்சத்தில் வந்து அமருமம்மா

53. ஆண்டாண்டு காலமாய் மக்களெலாம் - உன்
அருளைப் பெற்று மகிழ்வதற்கு
பாண்டவர் பத்தினி உறுதுணையார் - என்
பக்கத்தில் வந்து அமருமம்மா

54. அதிசயம் அற்புதம் தான் நிகழ்ந்த - அம்மா
அழகான இடத்தை தந்ததுபோல்
விதிவசம் வெல்ல வழிகாட்டி - நீயும்
விருப்போடு வந்து அமருமம்மா

55. எல்லாம் உன் செயலால் நிறைவேற - நீயும்
எப்போதும் பக்கத்தில் வந்தமரும்
சொல்லுக்கு வல்லவள் என்தாயே - நல்ல
சோதி வடிவாக வாருமம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டு - இனி
அங்கிங்கு அலையாமல் இங்கேயே
சுவரேற்றிக் குடிசை அமைத்தெடுத்து – நாங்கள்
சுகமாக இங்கே வாழ்வோமென்று

57. சரியென்று அவர்கள் சம்மதிக்க – அப்போ
சார்ந்த சிலபேரும் கூடவர
துரிதமாய் நிலையம் தாமெடுத்து – அன்று
துவங்கினார் ஆலயம் அமைக்கவென்று

58. தாதனும் தம்பி மற்றோர்க்கும் - அவர்
தயங்காமல் அனுமதி தான்வழங்கி
ஏதோவோர் பிரச்சினை இனியில்லை – நீங்கள்
எண்ணம்போல் ஆலயம் அமையுமென்றார்.

59. அன்றையக் கடமையை வன்னியனார் - வெகு
ஆணித்தரமாகத் தாம் முடித்து
இன்றிலிருந்து ஆலயத்தை – நீங்கள்
இனிதாகக் கட்டிமுடியுமென்றார்.

60. கம்புதடிகொடி வெட்டிச் சிலர் - அப்போ
காட்டிலிருந்து கொண்டுவந்து
சம்பூரணமாக சேர்க்குமட்டும் - நாம்
சற்று ஓர் வேலை பார்க்க வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. மனமுவந்துக் காரியத்தை – நாம்
மனநிறைவாகச் செய்வதற்கு
வனவாசம் போய்வரும் பாதைதன்னை - இன்று
வருவோம் பார்த்து என்று சொல்லி

62. தாதன் கவுந்தன் தன்னோடு - இன்னும்
சார்ந்த சிலபேரும் கூடச்சென்று
பாதகமில்லா வளிப்பாதை – கண்டு
பக்திமேல் பக்திமேலோங்க

63. எனையாழும் துரௌபதி நமஸ்காரம் - என்
எண்ணம்போல் எல்லாம் அமைந்திருக்கு
உனை நம்பிமக்கள் வாழ்வதற்கு – தாயே
உற்றதுணையாக நீயிருப்பாய்

64. என்று துதித்து தாதனுமே – தன்
எண்ணம் நிறைவேற வேண்டுமென்று
அன்பாலே மனது தான்குளிர - இனி
அனைத்தும் கைகூடும் என்று எண்ணி

65. இன்னுமொரு செயல் செய்ய வேண்டும் - என்று
இதயத்தில் கொண்ட தாதனவன்
அன்னை குந்தியை முன்னிறுத்தி – என்றும்
அவளருள் பெறவும் தானினைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. பாண்டுவுக்கு அன்று மாலையிட்டு – தன்
பத்தாவாய் ஏற்று வாழ்ந்தாலும்
முன்னாளில் துருவாசர் மந்திரத்தால் - அவள்
முக்திதரும் செல்வம் பெற்றதினால்

67. அன்போடு கொக்கட்டி மரத்தினிலே – அந்த
அம்மையின் உருவம் தான் செதுக்கி
என்னாளும் நிலையாய் நிலைத்திருக்க – அவர்
ஏற்ற உருவெலாம் தான்கொடுத்து

68. நிலையான பக்திவளர்வதற்கு – அம்மா
நீயென்றும் இங்கே வீற்றிருந்து
தலைசிறந்த இப் பாரதத்தை – தாயே
தரணிக்குணர்த்தும் என வணங்கி

69. குந்தியம்மாவின் உருவமதை – அவர்
குணம் குறியெல்லாம் தானமைய
சிந்தித்து செதுக்கி வடிவமைத்து – தாதன்
திருவருள்பெற்ற பின்னாலே

70. புரட்டாதி மாத அமாவாசைத் - திதி
பொருந்தும்நாள் எப்போ எனவறிந்து
வரமருளும் கொடியேற்ற வேண்டும் - அதை
வரைவது யாரெனத் தேர்ந்தெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. ஆச்சாரி வம்சத்தை ஆராய்ந்து - இது
அவர்களே செய்து முடிப்பாரென்று
சூரிய அடப்பன் குடியார்க்கு – அவர்
சொல்லிக் கொடுத்தார் வரைவுகளை

72. ஓங்கி வளர்ந்த கொடிமரமும் - அதன்
ஓரத்தில் சந்திரர் சூரியனும்
சங்கு சக்கரம் அமைய வேண்டும் - அதன்
தத்துவம் நன்கு விளங்க வேண்டும்

73. மச்ச உருவம் ஜொலிக்க வேண்டும் அதன்
மத்தியில் கூர்மம் திகழ வேண்டும்
உச்சமாம் அமிர்தம் கடைவதற்கு – அன்று
உதவிய வராகம் சேரவேண்டும்

74. இறைபக்தி கொண்ட ஐயர் வேண்டும் - பக்கம்
இருள் நீக்கும் குத்து விளக்கு வேண்டும்
நிறைகுடம் நன்றாய் அமைய வேண்டும் - அது
நிச்சயம் நிறைவாழ்வு சேர்க்க வேண்டும்.

75. இப்படித்தாதன் எடுத்துரைக்க – அதை
இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டு
தப்பாமல் அப்படியே அமைக்க – அதை
தாதனும் பார்த்து மகிழ்ச்சியுற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. ஈழத்துக் கலைஞன் கைவண்ணம் - கண்டு
இதுவும் போற்றத் தக்கதென்று
மகிழ்ச்சி பொங்க மடாலயத்தை – அவர்
மனம்போல சாப நிவர்த்தி செய்து

77. நல்லபடி இக்காரியத்தை – அன்னை
நடத்தி முடித்து வைப்பாளென்று
நல்லமனதோடு எல்லோரும் - இப்போ
நாடுவோம் கடற்கரையென்று சொல்லி

78. இப்படியிருக்கும் நேரத்திலே – அன்று
எல்லாமே சக்தி வளிபாடாய்
தப்பாமல் தாதன் செய்துவர – அதை
தம்பிகவுந்தனும் பார்த்திருந்து

79. ஆண்டுக்கொருமுறை பூசைசெய்ய – என்
அண்ணன் வழிவகை தேடுகின்றான்
என்தெய்வம் தனக்கு தினப்பூசை - இனி
இங்கே நடவாது என்றறிந்து

80. இஸ்டம் போல் நாமும் செல்ல வேண்டும் - என்று
எண்ணத்தில் கொண்ட கவுந்தனவன்
விஷ்ணு சிலையை எடுத்துக் கொண்டு – அவன்
விரைந்து சென்றான் வடதிசைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. கச்சிதமாகச் சென்றவனை – அன்று
கண்டசிலபேர் தானிறுத்தி
சமாச்சாரம் என்ன எனவினவ – அப்போ
சாற்றினான் கவுந்தன் உண்மைகளை

82. அன்று சமுத்திரத் தீர்த்தமாட – என்
அண்ணன் தாதனும் மற்றோரும்
தென்காசித் தீர்த்தம் ஆடியதும் - பின்பு
தேடிய இடங்களும் தானுரைத்து

83. கொண்டு வந்த பொருள் தன்னோடு – தாங்கள்
கொண்டுள்ள நோக்கமும் என்னவென்று
அன்று இரவு அவர்களிடம் - எல்லாம்
அவிழ்த்து விட்டான் கவுந்தனுமே

84. கேட்டு இருந்த அவர்களெல்லாம் - இனி
கெதியிலே எல்லாம் நிறைவேறும்
கேட்டவரம் தரும் பேச்சியம்மன் - இதை
கேட்டிருந்து அருள் புரிவாள்.

85. பெரியநீலாவணை இவ்வூரு - இங்கே
பெரிதாக விஷ்ணு கோயில் கட்ட
உரியவர் நாங்கள்தான் எம்மோடு – நீங்கள்
உறவாயிருக்கலாம் எனவுரைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. நல்லது என்று கவுந்தனுமே - இனி
நாரும் மலரும் போல் வாழ்வதற்கு
எல்லாம் இறைவன் சித்த மென்று – அவன்
எண்ணிச்சில நாள் அங்கிருந்தான்

87. ஆழிக் கரை சென்ற தாதனவன் - அங்கே
அருள் வேண்டிக் கும்பம்தானிறுத்தி
பழிபாவம் இல்லாமல் காக்க வேண்டும் - என்று
பக்தியாய்க் கடலில் நீராடி

88. நீராடி வந்த அனைவருக்கும் - தாதன்
நெற்றில் பண்டாரப் பொட்டுவைத்து
பாரினில் என்றும் நிலைத்திருக்கும் - எங்கள்
பாஞ்சாலி வாழ்க வாழ்க வென்று

89. பக்தி மேலோங்க அனைவருமே – அன்று
பக்குவமுள்ள மனிதர்களாய்
முக்தியடைந்த மகிழ்வோடு – பக்தர்
முழுமனதாக இருக்கையிலே

90. இமய மடந்தை தனைநினைத்து – தாதன்
இருகரம் நீட்டக் கும்பமது
தாமாக வந்து கரமேற – அதை
தாங்கிச் சுமந்து ஏந்திக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. வடக்கே சென்று எல்லைவரை — அவர்
வந்து அரசடிச் சந்தி மட்டும்
தெற்கே திரும்பி நடந்துவந்து — பின்னர்
சேர்ந்தார்கள் ஆலய வாசலிலே

92. ஆலயம் வந்து சேர்ந்ததுமே — தாதன்
அவரவர்க்குரிய இடங்களிலே
சிலைகளையெல்லாம் தானிறுத்தி — அவர்
செய்யும் கிரிகைகள் தான்முடிக்க

93. பற்றுள்ள பரிவார தெய்வங்களாம் - என்று
பகுதியறிந்து தானமர்த்த
உற்ற இடம் தன்னை தேர்ந்தெடுத்து — அவர்
உருவோடு அங்கே வைக்கவென்று

94. குந்தியம்மா தர்மர் வீமனென்று — நல்ல
குணமுள்ள அருச்சுணன் தன்னோடு
வந்தவண்ணமகள் துரௌபதியும் - மற்ற
வல்லநகுலன் சகாதேவன்

95. அண்டமளந்த பரந்தாமன் - என்று
ஆங்காங்கே அவர்களைத் தானமர்த்தி
இன்னும் பரிவார மூர்த்திகளாம் - என்று
இணக்கமுள்ள தெய்வங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. சிரம்தாழ்த்தி ஓர் முறை பணிந்தாலே – நல்ல
சித்தியும் முத்தியும் தந்தருளும்
வீரமாகாளி கமலக்கன்னி – மற்ற
பட்டாணி காடேறி வைரவர் என்றும்

97. அவரவர்க்குரிய மேடைகளைத் - தாதன்
ஆங்காங்கே யமைத்துப் பூசைசெய்து
புவன உயிர் உண்ணும் தானியமாம் - அந்த
பொன்னான நெற்கதிர் அலங்கரித்து

98. வானுயர் கொடிமரம் தனைவணங்கி – அதில்
வரைந்த கொடியை ஏற்றிவைத்து
மன்னுயிர் வாழவரம் தருவாய் - என்று
மனமார வாழ்த்தி அடிபணிந்து

99. இதற்கிடையே தாதனவன் - அங்கு
இருக்கும் அடியார் சிலபேரை
எதற்கும் இவர்கள் பொருத்தமென்று – அவர்
ஏற்றபாத்திரம் தான்வழங்கி

100. மூன்றுநாள் விரதம் இருந்தோர்க்கு – தாதன்
முழுமன தோடு காப்புக்கட்ட
அன்போடு பாரதக் கதைபடிக்க – அந்த
அன்னை துரௌபதி ஏடவிழ்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. பாரதம் படித்துப் பொருளுரைக்க – அதை
பக்தியாய்ப் பக்தர் செவிமடுத்து,
சிரமேல் இருகரம் தாம் கூப்பி – அன்று
தெரிசனை பெற்று மனமுருக

102. எல்லாம் புதுமையாய் நடக்கிறது - இதை
எல்லோரும் சென்று தலைவரிடம்
சொல்லுவோம் என்று திட்டமிட்டு - சிலர்
சென்றார் வன்னியனார் வாழ்பதிக்கு

103. இதற்கிடையிலே தாதனுமே - மிக
இதயம்நொந்து தான்வருந்தி
எதற்கும் தம்பியைக் கண்டால்தான் - தன்
எண்ணம் நிறைவேறும் என நினைத்து

104. கவுந்தன் இருக்கும் இடம் தெரிந்தோர் - என்னை
கட்டாயம் கூட்டிச் செல்லவேண்டும்
அவனிடம் இருக்கும் விஷ்ணு சிலையை – நாம்
அனைவரும் இங்கே எடுக்க வேண்டும்.

105. கொலுவில் இருப்போர் எல்லோரும் - என்
கூடவே இன்று வரவேண்டும்
நலமாக அவனுடன் நாம்பேசி – ஓர்
நல்லமுடிவு எடுப்போமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106. புறப்பட்டு எல்லோரும் நடந்து சென்று – அந்த
பெரியநீலா வணை வந்தடைந்து
பிறப்பால் இணைந்த என் சோதரனே – என்னை
பின்னே தள்ளிவிட்டு வந்ததென்ன

107. என்னெண்ணம் உனக்குப் புரிந்திருக்கும் – தம்பி
எல்லாமும் நீயும் அறிந்திருப்பாய்
உன்னெண்ணம் தன்னை நானறிவேன் - நாம்
ஒற்றுமையாகச் செயல்படணும்

108. நித்திய பூசை விஷ்ணுவுக்கு – நீயும்
நிரந்தரமாகச் செய்ய வேண்டும்
சித்தம் மகிழ்ந்து நீ யிங்கிருந்து – அதை
சிறப்பாக நடத்தி முடிக்க வேண்டும்

109. இப்போது என்வேலை முடியுமட்டும் - நீயும்
ஏதொன்றும் பேசாமல் அங்குவந்து
எப்படியோ விஷ்ணுசிலையோடு – நாம்
எழுந்தருளல் செய்ய வேண்டுமென்றார்

110. அனைத்தையும் கேட்ட கவுந்தனவன் - தன்
அண்ணன் செயலுக்கு சம்மதித்து
உனை நம்பி நானும் வருவதென்றால் - ஒரு
உடன்படிக்கை தேவையென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

111. வருகின்றேன் உன்னோடு பேதமில்லை — என்
வார்த்தையைச் சற்றுக் கேட்க வேண்டும்
திருவிழா முடிந்த பின்னாலே — நான்
திரும்பி விடுவேன் இங்கேயென்றான்

112. உன்விருப்பம்போல் வந்துவிடு — பின்
உற்ற துணையாக நானும் வந்து
அன்பாலே எல்லோரும் ஒற்றுமையாய் - இங்கு
ஆலயம் தன்னை நாமமைப்போம்

113. அதற்குக் கவுந்தன் சம்மதித்து - இனி
ஆவது எல்லாம் பார்ப்போமென்று
எதற்கும் எனக்கோர் இடம்தேவை — அது
இங்கேதான் அமைய வேண்டுமென்றான்

114. அதுவும் மிகமிக நல்லதுதான் - நாம்
ஆண்டுக்கொருமுறை இங்கிருந்து
மதுசூதனனை எழுந்தருளல் - செய்தால்
மக்கட்கும் பக்தியுண்டாகும்

115. இன்று நீயங்கு வரவேண்டாம் - நாங்கள்
ஏழாம் நாள் சாமி எழுந்தருளல்
அன்று எல்லோரும் இங்கு வந்து — நாம்
ஆடம்பரமாகக் கொண்டு செல்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116. எல்லோரும் ஏகமனதாக - இதை
ஏற்றுக்கொண்டு நன்கு உறவாடி
செல்வம் பலபெற்ற திருப்தியோடு — வந்து
சேர்ந்தார்கள் மீண்டும் ஆலயத்தில்

117. தாதனின் செயலை எடுத்துரைக்க — சிலர்
தலைவரிடத்தில் போய்ப் பணிந்து
ஏதேதோ காரியம் நடக்கிறது — ஐயா
எல்லாம் புதுமையாய் இருக்கிறது

118. கடற்கரைக் கும்பமும் அதிசயம்தான் - அங்கே
கண்கண்ட காட்சியும் அதிசயம்தான்
நடந்த வழியும் அதிசயம்தான் - பின்பு
நடந்தது எல்லாம் அதிசயம்தான்

119. கொடியேற்றி வைத்ததும் புதுமையையா - இன்னும்
கொலுவொன்றமைத்ததும் புதுமையையா
அடியார்க்கு கையிலேகாப்புக் கட்டி — அவர்
அமைத்தவிதமும் புதுமையையா

120. பெண்ணாக வேஷம் போட்டொருவர் - அந்த
பேர்பெற்ற பாரத ஏடவிழ்த்து
கண்ணான பாக்கள் தாம்படித்து — அவர்
கருத்தும் உரைத்தார் விஷேசமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121. ஓடியகவுந்தனைச் தேடிச் சென்று — ஒரு
ஒப்பந்தம் செய்தது விசமையா
தேடியும் காணாத காட்சியெல்லாம் - அங்கே
திருப்தியாய் நடக்குது என்றுரைக்க

122. வன்னியனாரும் கேட்டிருந்து — நான்
வருகிறேன் ஓர்நாள் என்றுசொல்லி
இன்னு மதிசயம் நடந்திருக்கும் - என
இதயத்தினுள்ளே தான் நினைத்தார்

123. நாலைந்து ஆறென்று நாள்கழிய — மற்ற
நாடிய ஏழாம் நாளன்று
எழுந்தருளல் செய்ய வேண்டுமென்று — அப்போ
ஏகினார் பெரிய நீலாவணைக்கு

124. எல்லோரும் சென்று ஒற்றுமையாய் - சுவாமி
எழுந்தருளல் செய்து கொண்டு வந்து
பல்லாண்டு பஞ்சவ ருடனிருந்து — அன்று
பாரதம் நடத்திய காரணனே

125. உன்னாலேயல்லாம் உருப்படியாய் - இந்த
உலகினிலென்றும் நடப்பதற்கு
என்னாளும் இங்கே குடியிருந்து — எந்த
இடையூறும் இல்லாமல் காருமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126. அவிபாக பூசை அன்றுமுதல் - அங்கே
அனுதினம் நடத்த வேண்டுமென்று
வீமனாய் பாத்திரம் ஏற்றவரால் - வெகு
விமர்சையாகச் செய்துவைத்து

127. தாதனால் எல்லாம் படைக்கப்பட்டு — அன்று
சரிவரக் கிரிகைகள் தான்முடித்து
காதலாய் விரதம் இருந்தோர்க்கு — அவர்
கருணையாய் பூநூலும் தான்போட்டு

128. எட்டாம் நாள் நாள்க்கட்டை வெட்ட வேண்டும் - என்று
எண்ணத்தில் கொண்ட தாதனவன்
கட்டாயம் அக்கினி நாம் குளிக்க — அதை
காட்டிலிருந்தே வெட்ட வென்று

129. பழவர்க்கம் நிறைந்த பரட்டை வனம் - அந்த
பகுதியில் எங்கு இருக்குதென்று
கிழக்கு வனத்திலே ஆராய்ந்து — அவர்
கிட்டிய நாட்கட்டை வெட்டுதற்கு

130. வீரமர மொன்றைத் தேர்ந்தெடுத்து — அதன்
வினை நீங்க பாவ நிவர்த்தி செய்து
சீராகத் தீக்குழி நின்றெரிய — நீயும்
திருவுளம் கொண்டு வாருமென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

131. ஒரு கட்டை வெட்டி எடுத்துக்கொண்டு – அதை
ஒருமனதோடு சுமந்து வந்து
பெருமையாய் பூசை முகத்தில் வைத்து – தாதன்
பேர்பெறுவுரு வெல்லாம் தான் கொடுத்து

132. தீக்குழி மூட்டி அதிலிறங்கி – நான்
திரெளபதி தன்னருள் காட்டுதற்கு
எக்காலும் எம்மோ டிணைந்திருந்து – தாயே
எல்லோர்க்கும் நல்லருள் தாருமென்றார்.

133. அதிகாலை எட்டாம் நாள் தாதனவன் அப்போ
ஆலயம் தன்னில் கொலுவிருந்தோர்
புதிதாகநானின்று புகழுவதை - நீங்கள்
பொறுப்பாக மனதில் கொள்ளுமென்று

134. மடப்பள்ளி தன்னில் அனைவரையும் - அவர்
மகிழ்வோடழைத்து அமரச்செய்து
கடமையில் இதுதான் மிகப்புனிதம் - இதை
கண்ணியமாகச் செய்யவேணும்.

135. தருமர் நீதிமன்றமொன்றை - நாம்
தாராளமாக அமைக்கப்போறோம்
பெருமையாய் இதனை எல்லோரும் - கேட்டு
பேதமை இல்லாமல் நடக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136. கொலுவிலிருந்து நூல்தரித்தோர் - நெஞ்சில்
கொஞ்சமும் வஞ்சனை இல்லாமல்
அலுவில் ஆலயம் தன்னிலென்று — நித்தம்
ஆலயம் தன்னில் இருக்கவேண்டும்.

137. வீட்டுக்கு வீடு போய்வருதல் - இன்னும்
வீதியில் சென்று உலாவருதல்
கட்டாயம் இவைகள் கூடாது - இதை
கவனத்தில் கொண்டு நடக்கவேண்டும்.

138. உங்களுக்குள்ளே சிலநேரம் - சில
ஒழுகற்ற வாய்ப்பேச்சு வந்துவிட்டால்
உங்கள் தலைவர் தருமரிடம் - வந்து
ஒழுங்கான முறையில் முறையிடலாம்.

139 அப்போதே தருமர் விசாரித்து - அவர்
அதற்காக தண்டனை தான் தருவார்
தோப்புக்கரணம் போடச்சொல்வார் - இன்றி
கோயிலை வலம்வந்து வணங்கச்சொல்வார்.

140. இப்படியான தண்டனைதான் - இதை
எல்லோரும் மதித்து நடக்கவேண்டும்
எப்படியோ இது தெய்வசெயல் - என்று
எல்லோர் மனதிலும் நினைப்பீரென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

141. தாதன் உணர்த்த தத்துவத்தை - அவர்கள்
தலைதாழ்த்தி ஏற்று மகிழ்வோடு
ஏதேனும் இடறு இல்லாமல் - நாங்கள்
எப்போதும் ஒற்றுமையாய் நடப்போம்

142. எட்டாம் நாள் அன்று வன்னியனார்க்கு – தாதன்
ஏவிய தூதன் உரைத்தது போல்
கட்டாயம் அன்று வருவேனென்று – அவர்
கண்ணான உத்தாரம் சொன்னாரே

143. அன்றே ஆலயம் வந்தடைந்து – அவர்
அன்னை பாஞ்சாலி தாழ்பணிந்து
இன்று எனக்குள் ஈர்ப்பு – என்
இதயத்தில் பாய்ந்தது எனவுணர்ந்து

144. அனைவர்க்கும் நல்லாசி வேண்டியவர் - அன்று
அத்தனை தெய்வமும் கைதொழுது
தனையறியாமலே மனமுருகி – உள்ள
தத்துவமெல்லாம் தாமுணர்ந்தார்

145. அப்போது தாதன் வன்னியனாரை – மிக
அன்போடு அங்கே வரவேற்று
தப்பாமல் பண்டாரப் பொட்டுவைத்து – அன்று
சந்தோஷமாக இருக்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146. நலமாக ஈழ நாடுவந்தீர் - நீங்கள்
நாடிய எண்ணம் நிறைவேற
ஆலயம் கட்ட இடம் கேட்டீர் - பின்பு
அதற்கான இடமும் தேர்ந்தெடுத்தீர்

147. மடாலயம் ஒன்றை அமைத்தெடுத்து - இப்போ
மகிழ்வோடு பூசை செய்துவாறீர்
பாடலும் பாடி பொருளுரைத்தீர் - என்று
பகர்ந்தார்கள் அதையும் கேட்டிருந்தேன்

148. இன்னும் என்னென்ன தேவை யென்று – நீங்கள்
இதயத்தில் உள்ளதை இப்போது
சொன்னால்தான் எல்லோரும் தாமறிவார் - என்று
சொன்னார் வன்னியனார் அப்போது

149. வன்னியனார் சொல்லுக்கு மதிப்பளித்து – தாதன்
வாய் திறந்தங்கே யப்போது
இனியவரேனான் சொல்லக்கேளும் - என்று
இயம்பினான் தமது தேவைகளை

150. பாண்டு இருப்புக்கோர் கொலுவமைய - இப்போ
பனிரெண்டு குலத்தார் சேரவேண்டும்
என்றுதாதன் எடுத்துரைத்து - இன்று
இதுதான் முதல் கட்டம் என்றுசொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

151. பனிரெண்டு குலத்துக்கு என்ன செய்வோம் - என்று
பார்த்தார் வன்னியனார் இருந்தோரை
கனிவோடு அங்குவாழ் மக்கள் குலம் - எல்லாம்
கணக்கிட்டுப் பார்த்தார் அப்போது

152. முக்குலம் பணிக்கனா குலத்தாரும் - மற்ற
முதுமைகொள் வேளாள குலத்தோடு
மங்காப்புகழ் கொண்ட ஆச்சாரி குலம் - இன்னும்
மனமுள்ள சான்றோர் குலத்தாரும்

153. சரியான மருத்துவ குலத்தாரும் - மற்ற
தண்டக்காறன் குலம் தான்சேர்த்து
அரிதாக ஆறேதான் இருக்குதென்று - இனி
அடுத்தது எங்கே எடுப்போமென்று

154. சாய்ந்த மருதூரில் வாழ்ந்துவரும் - அந்த
சந்தோஷமான மூப்பர் குலம்
தூய்மையாய் தம்பிலு வில்வாழும் - நல்ல
சுத்தப்பிராமணர் குலத்தோடு

155. எட்டுக்குலம் தான்இருக்குதென்று – அப்போ
எடுத்தி யம்பினார் வன்னியனார்
கட்டாயம் நாலு குலம்தேவை – அதை
காட்டுகிறேன் என்று தாதன் சொல்லி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

156. தாதன் ஒருகுலம் நானிருக்கேன் - நான்
சக்தி குலத்தை சேர்ந்தவன் தான்
ஆதலால் தம்பி விஷ்ணுகுலம் - நாம்
அதனால் பத்துக் குலமானோம்

157. பத்துக்குலம் தான் இருக்கிறது - என்று
பார்த்து ஆராய்ந்து வன்னியனார்
நித்தமும் எம்மோடிணைந்திருக்கும் - தம்பி
நீங்களும் ஓர் குலம் எனச் சேர்த்து

158. பனிரெண்டு குலமாக ஆச்சுதென்று - அவர்
பக்குவமாகத் தாதனிடம்
கனிவோடு சொல்லி அகமகிழ்ந்து - அன்று
கரிசனையாக இருக்கையிலே

159. எல்லாம் நிறைவாக நடந்திருக்கு - நாம்
ஏற்ற வழிவகை காண்பதற்கு
நல்லபடி நீங்கள் சொல்லுமென்று - அன்று
நவிலத்தாதனும் கேட்டிருந்து

160. ஒற்றுமை தன்னைக் கடைப்பிடித்து - மக்கள்
ஒன்றாக என்றும் வாழ்வதற்கு
பற்றறக்குல பேதம் மறக்க வேண்டும் - நாம்
பாசமாய் வாழப் பழக வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

161. சிந்தித்த எதிர்மன்ன சிங்கனவர் - இது
சின்னப் பிரச்சினை என்று சொல்லி
எந்த வகையாலும் மக்களுடன் - அவன்
இணைந்து வாழட்டும் என்றுசொன்னார்

162. வாதிட்டுப்பேசிய மக்கள் கூட்டம் - அன்று
வன்னியனார் பேச்சுக் கிடமளித்து
எதிரியாய் அவனை நினையாமல் - பின்பு
எல்லோரும் ஒற்றுமையானார்கள்

163. இன்னும் இருப்பது என்னவென்று — நீங்கள்
இப்போ தெடுத்து உரையுமென்று
வன்னியனாரும் தான்கேட்கத் - தாதன்
வாய்திறந்தங்கே சொல்லலுற்றார்

164. கல்யாணக்கால் வெட்டல் ஒரு பூசை - இதை
கலகலப்பாகச் செய்ய வேண்டும்
நல்லபடி சுத்தம் என்று சொல்லி — நாம்
நடாத்தும் தோரணப்பூசை யொன்று

165. இன்னுமொரு பூசை இருக்கிறது — அது
இதமான அலங்காரப் பூசையொன்று
கண்ணுக்கு இன்பம் அழிப்பதற்கு - அதை
கட்டாயம் சிறப்பாகச் செய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166. மனமொத்து பஞ்சவர் பாஞ்சாலி – அன்று
வனத்திலே சென்று வாழ்ந்துவந்த
வனவாசப் பூசையும் ஒன்றிருக்கு – அதை
வாகாகச் செய்து முடிக்க வேண்டும்.

167. வனவாசம் சென்று வந்தவுடன் - ஒரு
மௌனபூசையும் ஒன்றிருக்கு
மனநிறைவாக அப்பூசை – மிக
மௌனமாய்ச் செய்து முடிக்க வேண்டும்

168. பாரதப் போரிலே வெற்றிகொள்ள – அன்று
பாசுபதம் வேண்டி வில்விசையன்
பரமசிவனை நெஞ்சில் வைத்து – அவர்
பக்தியுடனின்ற தவநிலையும்

169. தவத்தைத் தடுக்கின்ற முயற்சிகளும் - பின்
தவம் செய்து முக்தி பெறுவதையும்
தவநிலைப் பூசையாய் அதைமதித்து – அதன்
தத்துவம் விளங்கச் செய்ய வேண்டும்

170. அக்கினி குளித்துக் கரையேறும் - ஒரு
அற்புத பூசையும் இருக்கிறது
எக்காலும் எவரும் தாம்வியக்க – அதை
எடுப்பாகச் செய்து காட்டவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

171. எல்லோர்க்கும் இன்பம் அளிக்கின்ற – நல்ல
எடுப்பான பூசையும் இருக்கிறது
பாற்பள்ளயம் என்று சொல்லி - அதை
பக்திமுக்தியாய்ச் செய்யவேண்டும்.

172. அப்புறம் தர்மர்க்கு முடிசூட்டி – வெகு
ஆடம்பரமாகக் கொண்டாடி
தப்பாமல் அவர் பாதம் நாம் பணிந்து – நல்ல
தர்மசிந்தனை பெறவேண்டும்

173. இப்படிப்பல பூசை இருக்கிறது – அதை
இவ்வாண்டு எல்லோரும் ஒற்றுமையாய்
எப்படியோ செய்து முடித்துவிட்டு – நாம்
எட்டாம் சடங்கன்று ஒன்றுகூடி

174. ஆலய நிர்வாகம் தெரிவு செய்து – அதில்
அவரவர் பொறுப்பை ஒப்படைத்து
குலவழி குடிவழிப் பூசை களாய் - அந்தக்
கூட்டத்தில் தீர்மானம் செய்ய வேண்டும்

175. இன்னுமொன்று நான் சொல்லவேண்டும் - அதை
இனிதாக எல்லோரும் கேட்க வேண்டும்
என்றென்றும் பத்ததி முறைப்படியே - .இங்கு
எல்லாக் கருமமும் நடக்க வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

176. நான் செய்யும் முறைகள் அத்தனையும் - நீங்கள்
நல்லபடியுற்றுத் தானோக்கி
ஒன்றும் குறையாமல் செய்ய வேண்டும் - என்று
உள்ளபடி நான் சொல்லுகின்றேன்

177. அதிலுமொன்றுனான் சொல்லுகின்றேன் - நீங்கள்
அவரவர் போடும் வேஷம் போல
எதிலும் பற்று இல்லாமல் - மனம்
எப்போதும் தூய்மையாய் இருக்க வேண்டும்

178. தூயமனதோடு இருந்தால்தான் - நாம்
செய்யும் வேள்வியை ஏற்றுக்கொண்டு
ஆயகலைகள் மனம் குளிர - நித்தம்
அருள்புரிவாள் துரௌபதியாள்

179. என்றுதாதன் எடுத்துரைக்க – அதை
எல்லோருமாக ஏற்றுக்கொண்டு
அன்று முதல் பூசை செய்துவந்து – பின்னே
அனைவரும் வனவாசம் செல்வதற்கு

180. விட்டுப்பிரியாப் புதன்கிழமை – அன்று
தொட்டது எல்லாம் துலங்குமென்று
காட்டிலே வனவாசம் செல்லவென்று – அந்த
காரிகையாளுடன் பஞ்சவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181. ஆலடிச்சந்தி வந்துசேர்ந்து – தர்மர்
அருமைத் தம்பி வீமனிடம்
நலமான காய்கனி கொய்துவர - இப்போ
நான்தாரேனென்று வாள்கொடுக்க

182. தருமரிடத்திலே வாள் பெற்று – வீமன்
தானே உணவு வகைதேடி
வருகிறேன் என்று விடைபெற்று – அவர்
வாறாரே கதலி வனம் தேடி

183. அழகான சோலை வனம் கடக்க – அப்போ
அனைவரும் கூடி வளி நடந்து
தாளவெட்டுவான் வந்தடைந்து – அந்த
தாமோதரனாரை நெஞ்சில் வைத்து

184. பஞ்சவர் வனத்திலே தானடக்க – பக்தர்
படைதிரண்டு சூழ்ந்துவர
கொஞ்சும் மணல்சேனை வனம் கடந்து – வந்து
கோயில் கொண்டிருக்கும் அம்பலத்தில்

185. அம்பலத்தடியில் வீற்றிருக்கும் - அந்த
ஆனைமுகன் பாதம் தாம்பணிந்து
நம்பினோம் எங்களை காத்தருளும் - என்று
நமஸ்காரம் செய்து வழிநடந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

186. வன்னிய னாரன்று வாழ்பதியாம் - அந்த
நாப்புட்டிமுனையை வந்தடைந்து
அன்போடு கோயிலில் அமந்திருக்கும் - எங்கள்
ஆனைமுகன் பாதம் தாம்தொழுது

187. சிக்கல் பலவற்றை நீக்கிவைக்கும் - எங்கள்
சிங்கார வேலன் திருக்கோயில்
பக்கத்திலிருக்குது போய்வருவோம் - என்று
பலபேரும் சென்று தாழ்பணிந்து

188. கலியுகவரதனாய்க் காட்சிதரும் - எங்கள்
கந்தவேள் எங்கள் முறையீடு
கலியுகபஞ்சவர் நாங்களப்பா – எம்மேல்
கருணை மனம் கொள்ள வேண்டுமென்று

189. விடைபெற்று மீண்டும் திரும்பிவந்து – பின்பு
விநாயகர் ஆலயம் தாம் சேர்ந்து
நடையின் களைதீரும் பூசைசெய்வோம் - என்று
நாயகியாளோடு அங்கமர்ந்து

190. ஐங்கரன் ஆலய பூசைசெய்து – அப்போ
அரசம் இலையில் படையல் வைத்து
எங்கும் நிறைந்த பரம் பொருளே - இது
எல்லோர்க்கும் அளித்த அன்னமென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

191. ஐவருடன் கிருஸ்ணர் அமர்ந்திருந்து – அந்த
அன்பான படையலை ஏற்றுக்கொண்டு
நைவேத்திய பூசையை தாமேற்று – பின்பு
நலமாக அதனை நிறைவுசெய்து

192. புண்ணியவான் தர்மர் தன்னமுதை – அவர்
பூசகர் கையிலே தான்கொடுத்து
மண்ணில்வாழ் பஞ்சவர் எங்களன்னம் - இதை
மனமார எற்றுக் கொள்ளுமென்றார்

193. மதயானை பலம் கொண்ட வீமனவன் - தானும்
மனமுவந் தவன் ஏற்றுக்கொண்டு
சாதத்தை யெடுத்து மனநிறைவாய் - அதை
தலைவர் கையிலே தான்கொடுத்தார்.

194. பத்தினி துளெரபதை பார்த்திருந்து – அன்னப்
படையல் யாருக்கு என்றுஎண்ணி
செந்தமிழ் நாயகி மனமகிழ்ந்து – அதை
செயலாளர் கையிலே தான்கொடுத்தார்.

195. பெருமையாய் இதையெல்லாம் பார்த்திருந்த – அந்த
பேரழகு மன்னன் அருச்சுணனும்
பிரதம வண்ணக்கர் தம்கரத்தில் - அவர்
பிரசாதம் எடுத்துத் தான் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

196. நல்லது இதுபோல் நாம் கொடுப்போம் - என்று
நகுலன் சாதம் தனையெடுத்து
பல்லுயிரும் ஒன்றாய்த் தானினைக்கும் அந்த
பணிக்கனா குடியார்க்குத் தான்கொடுத்தார்.

197. சகலதும் அறிந்த சகாதேவன் - எல்லாம்
சந்தோஷமாகப் பார்த்திருந்து
ஏகமனதாக நாம்கொடுப்போம் - என்று
உடையார் தத்திக்கு தாம் கொடுத்தார்.

198. பாருண்டபரந்தாமன் பார்த்திருந்து – தாமும்
படையலை யாருக்கு கொடுப்போமென்று
ஊர்ப்போடியாரை தாமழைத்து – அவர்
உணவையெடுத்துத் தாம் அழித்தார்

199. இப்படியாகக் கொடுத்துவிட்டு – அப்போ
இன்புற்று நன்கு எழுந்திருந்து
அப்பன் நகுலேசர் தமைத்துதித்து – அன்று
அனைவரும் பாதை தொடர்ந்தனரே

200. எங்களை யென்றும் காப்பதற்கு - இனி
இருக்கிறார் வைகுந்த வாசனென்று
புங்கையடி வெட்டை வந்தடைந்து – அங்கு
புன்னகையோடு வீற்றிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

201. செங்கண்மால் ஆலயம் தாங்கள் கண்டு – முன்பு
சேர்ந்து இருந்ததை தாம் நினைத்து
எங்க ளிடர்தீர்க்க அந்நாளில் - வந்து
எம்மோடிருந்த உறவுளன்று

202. நெஞ்சாரப் போற்றி மனமுருகி – நாங்கள்
நினைத்ததும் துணையாய் வாருமென்று
பஞ்சவர் வனவாசம் தாம்தொடர்ந்து – சென்று
பழம்தமிழ் சேனைக் குடியிருப்பில்

203. சித்தம் குளிர மனம்மகிழ்ந்து – நல்ல
தீந்தமிழ் முத்து தினம்சொரியும்
முத்துமாரியம்மன் தாழ்பணிந்து – அவள்
முத்தியும் சித்தியும் பெற்றுக்கொண்டு

204. எந்தவினையும் அணுகாமல் - எம்மை
எப்போதும் காத்து அருள்புரியும்
சித்திவிநாயகர் தாழ்போற்றி – அவர்
திருவருள்பெற்று விடைவாங்கி

205. கானகம் செல்லும் பாவணையில் - அப்போ
கருணை வேண்டி வழிநடந்து
சேனைக்குடியின் வடமுனையில் - வந்து
சிங்காரக் கோயில் கொண்டிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

206. அனைத்துயிர்க்கும் படியளக்கும் - எங்கள்
அன்னை பத்திர காளியரே
உனைநம்பி வாறோம் எமைக்காரும் - என்று
உள்ளத்துாய்மையாய்ப் போற்றி செய்து

207. வாழ்த்தி வணங்கி அடிபணிந்து — நாங்கள்
வனவாச இறுதியில் மறைந்திருந்து
வாழ வளிசெய்யும் மாதாவே — என்று
வணங்கி வரமும் பெற்றுக்கொண்டு

208. ஆலயத்தின் பின்னால் வந்தமர்ந்து — அப்போ
அனைவரும் தாம்பூலம் தாம் சுவைத்து
நலம்தரும் அஞ்ஞாத வாசமென்று — சொல்லி
நடந்தார்கள் ஆர வாரமின்றி.

209. விராட சேதம் என நினைத்து - இனி
விடும் மூச்சும் கேட்கக்கூடா தென்று
ஆரவாரம் ஏதும் இல்லாமல் - சென்று
அடைந்தார்கள் மீண்டும் அரசடியில்

210. அங்கேயிருந்து களையாறி — பின்பு
ஆலயம் சென்று தாமமர்ந்து
தாங்களே யறிந்து கொள்ளவென்று — அன்று
தக்கபடி மௌன பூசை செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

211. வியாழன் இரவு தவநிலைக்கு – அந்த
விஜயன் செல்லும் வேளையிலே
கயல்விழி யழகிபே ரண்டச்சியும் - வந்து
காதலால் விஜயனை தான்தடுக்க

212. பன்றியுருக் கொண்டு வந்தவளை – அந்த
பார்த்தீபன் கொன்று பகைமுடித்து
சென்று தவத்திலே தானிருந்து – நன்கு
சிறப்பான பாசு பதம்பெற்று

213. பாரதப் போரிலே ஜெயம் பெறவே – சகாதேவன்
பகர்ந்த சாஸ்த்திரம் பொய்யாமல்
சீராக வளர்த்த தாய் தலைபிடிக்க – தந்தை
சித்தனை ஒன்றாக்கி கழுத்தறுத்து

214. வல்ல அரவானைத் தாய் நினைத்து – அவள்
வாய் விட்டு ஒப்பாரி வைத்தழுது
எல்லோர் துயர்தீர்க்க வந்தவனே – என்
மகனே அரவானே எனப்புலம்பி

215. களப்பலிகொடுத்த பின்னாலே – சில
கடமைகள் அங்கே நிறைவேற்றி
உளமார நெடுமாலை நெஞ்சில் வைத்து – பின்பு
உருவோடு ஓமம் வளர்த்தெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

216. அன்னை பாஞ்சாலி ஏந்திவந்து – அங்கே
ஆளவெட்டிய குழியினிலே
மண்ணுண்டகண்ணனைத் தான்தொழுது – அந்த
மாதா மனமாரக் கொண்டுவந்து

217. கள்ளமில்லா வெள்ளிக்கிழமையன்று – அதி
காலையில் அக்கினி தாம் வளர்த்து
வெள்ளையுள்ளமாய் எல்லோரும் - தீ
விருப்பம்போல் மிதிக்க வேண்டுமென்று

218. நெஞ்சம் குளிரும் அந்தியிலே – நன்கு
நீராட ஆழிக் கரை நாடி
மஞ்சள் பூசித் தலைமூழ்கி – வந்து
மனதைத் திடமாக வைத்துக்கொண்டு

219. அக்கினி தன்னை வலம்வந்து – அந்த
ஆதிநாராயணர் தமைத்துதித்து
விக்கினம் தீர்த்து எமைக்காரும் - என்று
விருப்போடு தீயில் நடைபயின்று

220. பகர்ந்தது போலே சனிக்கிழமை – பால்
பள்ளயம் செய்து குதுகலமாய்
அகமகிழ்ந்து தருமருக்கு – அன்று
ஆட்சிக்குரிய முடிசூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

221. அதிமகா விஷ்ணு தனைப்போற்றி – அவர்
அருளாசி பெற்ற பின்னாலே
வதிவிடம் செல்ல எழுந்தருளும் - என்று
வரவேற்று கோவிந்தா கோஷமிட்டு

222. உரியவரெல்லாம் பின்தொடர – அரி
உளமாரப் பல்லக்கில் தானமர்ந்து
பெரியநீலாவணை வாழ்பதிக்கு – கொண்டு
பெருமையாய்ச் சேர்த்த பின்னாலே

223. அங்கேயிருந்து கவுந்தனவன் - அந்த
ஆதிநாராயணர் மனம் குளிர
திங்கள் தவறாமல் தினப்பூசை – செய்து
திருவருள்பெற்று வாழலானார்.

224. தாதனும் மற்றோர் மனமகிழ்ந்து - இனி
தங்கள் கடமை முடிந்ததென்று
மாதம் பனிரெண்டு கழிந்தபின்னே – நாங்கள்
வருவோமென்று விடையும் பெற்று

225. மீண்டும் ஆலயம் திரும்பிவந்த – தாதன்
வேண்டும் கடமைகள் செய்வோமென்று
எண்ணியே எட்டாம்நாள் ஆவதற்கு – முன்னே
ஏற்ற உபாயம் தேடலுற்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

226. கொலுவிலிருந்தோர் அனைவரையும் - தாதன்
கூட்டியே ஓரிடம் தானழைத்து
நலமான தெய்வங்கள் யார்யார்க்கு – என்று
நானிப்போ அறிய வேண்டுமென்று

227. ஒவ்வொருத்தராக உருவேற்றி – அவர்
உடலிலுள்ளதைத் தானறிந்து
திவ்வியமாக உங்களுக்கு – என்றும்
திருவருள் புரியும் தெய்வமென்று

228. காளி காடேறி வீரபத்திரன் - மற்ற
கருணைகொள் வீரமாகாளி யென்றும்
நீலி கருப்பன் சாமுண்டி - இன்னும்
நீங்காமலிருப்பதும் தானறிந்து

229. நல்லதை மட்டும் வைத்துவிட்டு - இனி
நமக்குத வாததைக் கழித்துவிட்டு
எல்லாம் இனிதாக நிறைவேறும் - என்று
எட்டாம் நாள் வரையும் காத்திருந்து

230. எட்டாம் சடங்கன்று வன்னியனாரும் - மற்ற
எல்லா மக்களும் தான்கூட
திட்டம் வகுத்த விதம்போல – தாதன்
திருவாய் மலர்ந்து தானுரைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

231. பாண்டவர் கொலுவாய் இருந்தோரும் - வீர
பத்திரன் கொலுவாய் இருந்தோரும்
இன்றுபோல் அவர்கள் குலத்தாரே — மேலும்
என்றென்றும் தொடர்ந்து பணிபுரிந்து

232. பெண்ணடி வூதியம் போலிவர்கள் - எந்தக்
காலமும் பெருமை மாறாமல்
ஆண்டாண்டு காலமாய் தொடர்ந்துவர — என்
அனுமதி இவர்கட்கு வேண்டுமென்று

233. சாசனம் செய்ய வேண்டுமென்று — தாதன்
தன்னெண்ணம் தன்னையப்போது
மாசிலா எதிர்மன்ன சிங்கனிடம் - அவர்
மனிதிலுள்ளதை எடுத்துரைக்க

234. நல்லது என்று வன்னியனாரும் - அதை
நான் செய்து தருவேன் என்று சொல்லி
எல்லோரும் அமர்ந்த அவையினிலே — நாம்
எடுப்போம் எல்லா முடிவுமென்று

235. பரிபாலனசபையொன்றை நாம் வகித்து — அதன்
பிரகாரம் ஆலயம் வளர்வதற்கு
சரியாக நீங்கள் தெரிவு செய்வீர் - என்று
சாற்றினான் தாதன் வன்னியனார்க்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

236. அவையிலிருந்த சிலபெரியோர் - அப்போ
அக்கறையோடு எழுந்துநின்று
சபையிலிருப்போரின் முதல் தெரிவு - இதில்
தலைமைப் பதவியை நீங்களேற்பீர்

237. பற்பல திறமைகள் கொண்டிருக்கும் - நீங்கள்
பணிக்கனார் குடியைச் சேர்ந்ததினால்
நலமான தலைவர் பதவிதனை — ஏற்று
நாங்களும் வாழ வழிவகுப்பீர்

238. அதன்பின்னே உள்ள பதவிகளை — நீங்கள்
ஆரார்க்கு என்று தெரிவு செய்து
இதமாக அதனையும் எடுத்துரைப்பீர் - என்று
எல்லோரும் ஒன்றாய்க் குரல்கொடுக்க

239. கட்டாயம் இவர்தான் பொருத்தமென்று — அவர்
காரியதரிசியாய் அப்போது
செட்டிவேளாளர் குடியாரை — அவர்
தெரிவு செய்ய ஏற்றுக்கொண்டு

240. எக்காலும் பொக்கிஷமாயிருந்து — பொருள்
எல்லாமே நன்குகாத்துவந்து
ஐக்கியமாக மக்களுடன் - பேச
ஆர்வமுள்ளவர் இவர்களென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

241. நழுவாது கடமை புரிவதற்கு - இந்த
நலமான முக்குல குடிசேர்ந்த
மழுவரசன்குடி தனிலொருவர் - தன்னை
மகிழ்வான பொருளாளர் பதவியென்றார்.

242. ஏகமனதாக எல்லோரும் - இதை
ஏற்றுக்கொண்டதன் பின்னாலே
தேக ஆரோக்கியம் கொண்டோரை – அவர்
தெரிவுசெய்ய வேண்டுமென்று

243. சீராக கடமை நடக்குதென்று – எங்கும்
சென்று நிலமை காண்பதற்கு
ஊர்ப்போடியாக ஒருவரைத்தான் - அவர்
உடனே தெரிவு செய்யவென்று

244. இணக்கமாய் நற்சேவை செய்வதற்கு – என்றும்
இவர்தான் பொருத்தம் எனநினைத்து
பணிக்கனா குடியைச் சேர்ந்தோரை – அந்த
பதவிக்கு அவரும் தேர்ந்தெடுக்க

245. எல்லோரும் இதனை ஏற்றுக்கொண்டு - இனி
என்ன நடக்குமோ என்றிருக்க
நல்லதோர்செய்தி சொல்லுகிறேன் - நாம்
நல்லபடி கொலு அமைக்கப்போறோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

246. தருமர்வீமன் அருச்சுணனும் - மற்ற
தையல் துரௌபதி தன்னோடு
பேர்பெற்ற நகுல சகாதேவன் - என்ற
பெயரோடு சிலபேரைத் தெரிவு செய்து

247. பவளவாய் மாயனின் வேஷம்கொள்ள – அங்கே
பக்குவம் யாருக்கென அறிந்து
வேளாளர் குலத்தைச் சேர்ந்தோரை – அவர்
விஷ்ணுவாகத் தேர்ந்தெடுத்து

248. முக்கியமானதொரு செய்தி - இதை
முழுதாக எல்லோரும் கேட்க வேண்டும்
எக்காலும் எவராலும் முடியாது – ஏதோ
எப்போதோ தொடக்கு வரக்கூடும்

249. எனக்காக நானிதைச் சொல்லவில்லை - இது
எல்லோர்க்கும் பொதுவான விடயமென்று
மனதில் பட்டதை சொல்லுகிறேன் - என்று
மக்களுக்கன்று எடுத்துரைத்து

250. இன்னுமொன்று இருக்கிறது – அதை
இப்போது நான் சொல்லக் கேளீரென்று
சொன்னார் வன்னியனார் அப்போது – எல்லோர்
செவியும் உற்றுக் கேட்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

251. அங்கம் சிலிர்க்க அருள்வேண்டும் - இந்த
ஆலய பூசாரி மார்தனக்கும்
பங்குரிமையாகப் பிரிக்கப்படும் - என்று
பகர்ந்தார் அதனின் பெறுபேற்றை

252. தொடர்ந்து ஐந்தாண்டு இப்பணியில் - அவர்
சேவை புரிந்து வரும்போது
இடையிலே தவறி அவர்போனல் - பின்
இருக்கும் சந்ததி தனிலொருவர்

253. அண்ணன் தம்பி முறை கொண்டோர்கள் - இன்றி
அவர் பெற்ற மக்கள் தனிலொருவர்
தன்பணி செய்ய முன்வரலாம் - என்று
தனித்துவமாக அவர் கூறி

254. தவறும் பட்சத்தில் இப்பொறுப்பை — மீண்டும்
தலைமைப் பீடமே பொறுப்பேற்று
எவரேனும் ஒருவரைத் தெரிவு செய்து — பின்பு
ஏற்றாப்போல் சடங்கு நடக்குமென்றார்.

255. இந்த ஏற்பாடுதான் பூசகர்க்கும் - என்று
எல்லோர் முன்னிலையிலும் தாமுரைத்து
சிந்தித்து இன்னும் முடிவெடுக்க — அவர்
தீர்க்க மனதோடு தானிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

256. சொன்னார் வன்னியனார் மனம் திறந்து – அன்று
சொந்தமான மக்கள்தான் மகிழ
என்றென்றும் மாறாமல் நீங்களெல்லாம் - இதை
ஏகமனதோடு செய்ய வேண்டும்.

257. ஊர் மக்கள் தமக்கே பூசையெலாம் - இப்போ
உள்ளபடி நாம் பகிர்ந்தளிப்போம்
ஆரம்ப கொடியேற்றப் பூசையினை - இந்த
ஆலய நிர்வாகம் செய்ய வேண்டும்

258. இரண்டாம் நாள் பூசை செய்வதற்கு -அவர்
இணக்கம்யாருக் கென அறிந்து
வீரச்சோலை வேளாளர் குடி- இதை
விருப்போடு செய்து வாருமென்றார்

259. முத்தான மூன்றாம் நாள் பூசைதன்னை-என்றும்
முழுமன தோடு செய்வதற்கு
பெத்தான் குடியாரே ஏற்றவர்கள் -என்று
பெருமையாய் சொன்னார் வன்னியனார்

260 வன்னிப்பணிக்கனார் குடியார்க்கு –அவர்
வாய்திறந் தின்னும் சொல்லலுற்றார்
நான்காம் நாள் பூசையை நீங்களென்றும்-மிக
நல மோடு செய்து வாருமென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

261. மூங்கில்சோலை பிராமணக்குடி -இதை
முன்னின்று செய்ய வேண்டுமென்று
மங்காத ஐந்தாம் நாள் பூசை என்று - அவர்
மனம்திறந்து எடுத்துரைத்தார்

262. நம்பிக்கையோடு ஆறாம் நாள் -பூசை
நலமாகச் செய்துவருவதற்கு
வம்மிச் சோலை வேளாளர் குடி- என்று
வழங்கிவைத்தார் வன்னியனார் .

263. ஏழாம் நாள் சாமி எழுந்தருளல் - இதை
எடுப்பாகச் செய்து வருவதற்கு
பழுதிலா துருவிழி வேளாளர் குடி - என்றும்
பக்குவமாக நடத்த வேண்டும்

264 படைதிரண்டுவந்தாலும் -அதை
பக்குவமாக அனுசரிக்கும்
படையாண்டகுடியார் எட்டாம்நாள்-பூசை
பதமாகச் செய்து வாருமென்றார்.

265. மழுவரசன்குடி சார்ந்தோரை - அவர்
மகிழ்வோடு உற்றுத் தான்நோக்கி
அழகான ஒன்பதாம் நாள் பூசை - இதை
அன்போடு செய்து வாருமென்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

266. இன்னுமிருக்கின்ற பூசைதன்னை-அவர்
இனிதாக உற்றுத்தான்நோக்கி
சின்ன மடவர் குடியார்க்கு- இந்த
சிறப்பான பத்தாம் நாள் பூசையென்றார்

267. சங்கத் தமிழர் குலம் காக்க-இந்த
தரணியில் என்றும் வாழ்ந்துவரும்
சங்கரப்பத்தான் குடியார்க்கு-என்று
சாற்றினார் பதினோராம் பூசைதன்னை

268. எல்லோர்க்கும் மங்களம் சேர்ப்பதற்கு – மிக
இனிதாக நடத்தும் பூசையொன்று
கல்யாணக்கால் வெட்டும் வைபவத்தை – செய்ய
கட்டாயம் இவர்கள் பொருத்தமென்று

269. எக்காலும் பணிக்கனா குடியாரே - இதை
ஏற்று நடத்த வேண்டுமென்று
அக்கரையோடு வன்னியனாரும் - அன்று
அருளினார் எல்லோரும் தான்கேட்க

270. கட்டாயம் தோரணப்பூசை செய்ய-அப்போ
கண்ணியமானவர் எனவறிந்து
மொட்டச்செட்டி வேளாளர் குடி-இதை
முழுமனதோடு செய்யுமென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

271. பெருமையாய் அலங்காரம் செய்வதற்கு — ஒரு
பேர்பெற்ற பூசை அதைச் செய்ய
மருத்துவ குலத்தார்க்கு வழங்குகிறேன் - என்று
வன்னியனாரும் தான்புகன்றார்

272 கண்ணான வனவாசப் பூசையொன்று-இதை
கருத்தோடு செய்து முடிப்பதற்கு
சான்றோர் வேலாப் பணிக்கனா குடி-அதை
சந்தோசமாகச் செய்யுமென்றார்

273. மென்மையாகவொரு மௌனபூசை - இதை
மேலாகச் செய்து முடிப்பதற்கு
தண்டக்காரன் குலம் எனவிளங்கும் - நல்ல
சலவைத்தொழிலாளர் ஏற்பீரென்றார்

274. விஜயன் பாசுபதம் பெற்ற — பெரும்
விருப்புள்ள தவநிலைப் பள்ளயமும்
விஸ்வப் பிரம குலத்தார்க்கு — என்று
விளம்பினார் எல்லோரும் தானறிய.

275. தீ மிதித்தல் பால் பள்ளயமும் - மற்ற
தர்மர்க்குமுடி சூட்டல் வைபவமும்
அதிகாரம் கொண்ட பொதுமக்கள் — அதை
அனைவரும் பொதுவாகச் செய்யுமென்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

276. இன்றுபோல் அன்றும் குழறுபடி – அங்கே
ஆரம்பமாகி இருந்தாலும்
வன்னியனார் சொல்லுக்கு தலைசாய்த்து -அதை
மனநிறைவோடு ஏற்றுக்கொள்ள

277. அப்போது காணிக்கைப் பணமாக -பக்தர்
அளித்த நிதியைக் கணக்கெடுக்க
முப்பது றசால் என்று கணக்குவைத்து – அதை
முன்னின்று பொருளாளர் ஏற்றுக்கொண்டார்

278. தாதனால் அன்று கொண்டுவந்த – அந்த
சக்தி பூசை உடமையெல்லாம்
எதோவோர் குறையுமில்லாமல் - அவை
எல்லாமே தலைவர் ஏற்றுக்கொள்ள

279. அகத்தி லின்ப ஊற்றெடுக்க – தன்
அத்தனை திட்டமும் முடிந்ததென்று
மகிழ்ந்து தாதனும் அப்போது – அவர்
மனதிலுள்ளதைத் தானுரைத்தார்

280. சில ஆண்டு நான் இங்கே தங்கியிருந்து – நன்கு
திறம்பட எல்லாமே செய்துதாறேன்
நலமாக எல்லோரும் சேர்ந்து வாழ்வோம் - என்று
நம்பியே தாதனும் சொல்லியபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281. ஆலயம் தன்னில் சிலைகளெல்லாம் - அப்போ
அவையடக்கமாய் வைத்துவிட்டு
சாலவே எதிர்மன்ன சிங்கனுமே - சபை
சந்தோஷமாக நிறைவு செய்ய

282. எல்லோரும் அன்று விடைபெற்று – தங்கள்
இருப்பிடம் நோக்கிப் போகையிலே
நல்லது என்று கவுந்தனுமே – அப்போ
நாமும் நம்வேலை பார்ப்போமென்று

283. போய்வாறேன் என்று விடைபெற்று – அவர்
பெரியநீலாவணை போய்ச்சேர
தாய்கண்ட கன்று போல மக்கள் - சேர்ந்து
தங்கள் தலைவர் வந்தாரென்று

284. வந்த கவுந்தனை வரவேற்று – அப்போ
வாயார வாழ்த்தி அகமகிழ்ந்து
எந்தவோர் தொல்லையுமில்லாமல் -நீங்கள்
எம்பிரான் விஷ்ணுவின் ஆலயத்தை

285. இங்கே நலமாக அமைக்க வேண்டும் - நாங்கள்
எல்லோரும் சேர்ந்து ஒத்துழைப்போம்
தாங்களே இதனின் கிரிகையெல்லாம் - என்றும்
சரியாகச் செய்து முடிப்பீரென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

286. ஊர்மக்கள் அன்று கேட்டதற்கு – மிக
உள்ளன்போடு கவுந்தனுமே
சீராகச் செய்து முடித்தபின்தான் - நான்
திரும்பவும் என்நாடு செல்வேனென்று

287. அன்னியயொன்னிய மாய்ப்பழகி – அன்று
அனைவரோடும் கவுந்தனவன்
என்னாழும் வாழ்ந்து வரும்போது – அவன்
இடையிலே மரணித்து விட்டதனால்

288. தம்பி கவுந்தன் மறைந்தபின்பு - இங்கு
தரிப்பது திறமை இல்லையென்று
வெம்பியதாதனும் அப்போது - இனி
வேறூர் செல்ல வேண்டுமென்று

289. எண்ணம் மனதிலே இருந்தாலும் - தான்
எடுத்த கொள்கை நிறைவேற
பாண்டு இருப்பு அமைவதற்கு – அவர்
பலகாலும் இங்கே ஒத்துழைத்து

290. சிலநாள் சென்றதன் பின்னாலே – அவர்
செய்தி யாருக்கும் சொல்லாமல்
சிலாபத்துறையைத் தானோக்கி – அன்று
சென்றார் யாருக்கும் தெரியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

291. அங்கேசென்று உடப்பூரில் - அவர்
அருள்தரும் அன்னை துரௌபதிக்கு
அங்கத்திலுள்ள சக்தியினால் - மீண்டும்
அங்கேயோர் ஆலயம் அமைத்தாராம்

292. இருந்தாப்போல் தாதன் சென்றதினால் - பின்பு
இங்கேயிருந்தோர் எல்லோரும்
பெரும்துன்பம் கவலை மேலோங்க — அவர்
போன இடம் தன்னைத் தேடலுற்றார்

293. தேடலில் அவர் நிற்கும் இடமறிந்து - இனி
செய்வது எதுவும் இல்லையென்று
கூடியே நாமினிப் பூசைசெய்வோம் - என்று
கொண்டார்கள் உறுதி ஒற்றுமையாய்

294. தாதன் அன்று புகன்றவற்றை — தன்
நெஞ்சத்தில் கொண்ட பூசகரும்
எதுவுமேமாறாமல் ஆண்டுதோறும் - செய்ய
எடுத்த முடிவுபோல் இன்றுவரை

295. ஒன்றோடு ஒன்று குறையாமல் - அந்த
ஒழுங்கான பத்ததி முறைப்படியே
இன்றும் நடாத்தி வருகிறார்கள் - எந்த
இடையூறும் வராமல் எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

296. இப்படியிருக்கும் நாளையிலே - இதை
இருசெவியாலே கேள்வியுற்று
அப்போதே சென்று பார்க்க வேண்டும் - என்று
அகமுருகிய ஓர் அரசன்

297. எங்கும் நடக்காத ஓர் மகிமை - இந்த
ஈழத்தின் கிழக்கே நடப்பதனை
மங்களமாகத் தான் பார்க்க — அந்த
மன்னன் விமலதர்மசூரியனும்

298. கண்டியிலிருந்து இங்கு வந்து — அவன்
கண்ணாரக் கண்டு மனமகிழ்ந்து
பொன்விளை நெற்காணி சாசனமும் - இன்னும்
பொன்னும் பொருளும் வழங்கிச்சென்றான்.

299. அன்று தாதனுடனிருந்து — தன்
அனுபவமூலமாய் அறிந்தவற்றை
அன்பன் அழகப்பன் மனதில் வைத்து — அவர்
அருமை மருமகன் தனக்குரைக்க

300. மருமகன் கதிர்காமர் கண்டுமணி — தன்
மனத்திலே அதனை வைத்திருந்து
பெருமையாய் தனது மருமகற்கு — அவர்
பின்னாளில் இதனை எடுத்துரைக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

301. கேதாரம் அழகப்பன் என்பவரும் - இதை
கேட்டு அறிந்து வைத்திருந்து
ஆதாரத்தோடுதன் மருகனுக்கு – மிக
அன்பா யெடுத்து அவர்க்கோத

302. மூன்றாம் தலைமுறை யாக இதை – தம்
முன்னோருரைக்க கேட்டுவந்து
நான்காம் தலைமுறை என்தனக்கு - இன்று
நானெடுத் தோதக் கேளுமென்று

303. இளையதம்பி இராஜதுரை – என்னும்
இனிய மருமகன் தனக்கவரும்
நாளைய சந்ததி உங்களுக்கு – நான்
நவில்கிறேன் என்று இயம்பியதை

304. வரலாறு தேடி யலைகின்ற - இந்த
வைரமுத்து கணேசனை
அரவணைத்தவர் ஓதியதை – நானும்
அன்றாடம் கேட்டுக் கவியாக்கி

305. எல்லோரும் அறிய வேண்டுமென்று - இதை
எழில் கொஞ்சும் கும்மிப்பாடல்களாய்
நல்லபடிநான் வடித்தெடுத்தேன் - இந்த
நானில மக்களும் அறிந்துகொள்ள.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐந்தாம் வேதமதை அவனிக் குணர்த்துதற்கு
இந்தியா இருந்து ஈழநா டிங்குவந்து – சிந்தைதனில்
கொண்டுள்ள கருத்தால் கோயிலொன்றுருவான
பாண்டு இருப்பு பதிக்கு என் வணக்கம்

- மண்ணுலகில் மனு நீதி மகிழ்வோடு நடத்தி
தன்னுயிர்போல் மக்களை தரணிதனில் காத்துவந்த – வன்னியனார்
எதிர்மன்ன சிங்கனென்னும் இனிய தமிழ்மகனுக்கும்
மதிப்போடு நான் சொல்வேன் வணக்கம்.

- தாதன் கவுந்தனென்று தன்நண்பர் சிலரோடு
காதலால் கலமேறி கடல்கடந்து - இதமாக
ஈழத்து தென்காசி இன்பமுடன் வந்தடைந்த
ஆழ்ந்த பக்திகொண்டோர்க்கும் அடியேனின் வணக்கம்

- பாண்டிருப்பு தன்னில் பாசமுடன் வந்தமர்ந்து
வேண்டியதை நல்கும் விஜயனின் தேவிதனை – என்னாளும்
இதயத்துள் வைத்து இஷ்டமுடன் அனுதினமும்
பாதாரவிந்தம் பணிவேர்க்கும் என்வணக்கம்.

- முன்னாளில் நடந்தகதை முழுவதும் நானறியேன்
என்செவியில் கேட்டதுவும் எழுதிப் படித்ததுவும் - இன்னாளில்
வரலாற்றுக் கவிதையென்று வரைந்ததனை நானிப்போ
சிரம் தாழ்த்தி வைத்தேன் முன்பு

- ஆறுகுற்றம் நூறுபிழை அடியேனின் கவியில்
தாறுமாறாக தலைவிரித் திருந்தாலும் - கூறுதமிழ்
கற்றோர் பொறுப்பீர் கற்றறிந்தோர் மன்னிப்பீர்
பற்றோடு உங்களுக்கும் பணிவான என் வணக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தீப்பள்ளயம் பார்க்கப் போகவேணும் - அத்தான்
தீன்பண்டம் வாங்கி உண்ணவேணும்
காப்பு சீப்பு எல்லாம் வாங்க வேணும் - நாம்
கைகோர்த்து வீதி யுலாவரணும்

2. . சட்டி,பெட்டி,பானை வாங்க வேண்டும் - அத்தான்
சாடி கிடாரமும் வாங்க வேண்டும
முட்டி குடமெல்லாம் வாங்க வேண்டும் - நல்ல
முத்துமாலை வகை வாங்க வேண்டும்

3. வெண்கலப் பாத்திரம் வாங்க வேண்டும் - அத்தான்
விளக்கு வேல் சூலம் வாங்க வேண்டும்
கண்ணாடி படமெல்லாம் வாங்க வேணும் - அத்தான்
காலுக்கு மெட்டியும் வாங்க வேணும்

4. பூச்சாடி மலர்க்கொத்து வாங்க வேண்டும் - அத்தான்
புதுப்புது டிசைன் தேடி அலைய வேண்டும்
கச்சானும் கடலையும் சப்பவேண்டும் - மற்ற
காரோட்டம் கிணற்றிலே பார்க்க வேண்டும்

5. ஐஸ் கிறீம் சோடா குடிக்க வேண்டும் - அத்தான்
அதனோடு ஜோக்கட்டும் உண்ண வேடும்
ஐஸ் போட்ட சர்பத்தும் குடிக்க வேண்டும் - நாம
அதனோட சுவையும் பார்க்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. புத்தகக் கடையும் பார்க்க வேண்டும் - அத்தான்
புடிச்சால்தான் அதனையும் வாங்க வேண்டும்
வெத்திலை பீடாவும் போட வேணும்- இன்னும்
வேடிக்கைச் சாமானும் வாங்க வேணும்

7. ஊதி வலுன் எல்லாம் வாங்க வேண்டும் - அத்தான்
உடைவதை நாம் பார்த்துச் சிரிக்க வேண்டும்
காதிலே கேட்கும் இரைச்சல் கேட்டு – நம்ம
கண்ணிலே தூக்கம் பறக்க வேண்டும்

8. கரும்பு தளப்பத்து வாங்க வேண்டும் - பெண்ணே
கட்டாகக் கட்டினாம் எடுக்க வேண்டும்
குருத்தோலை மடப்பெட்டி வாங்க வேண்டும் - பெண்ணே
கூட்டுப் பெட்டி சுளகும் வாங்க வேண்டும்

9. தாச்சி குரச்சி வாங்க வேண்டும் - அத்தான்
தாம்பாளம் கிண்ணமும் வாங்க வேண்டும்
இச்சைகொள் பனாட்டும் வாங்க வேண்டும் - அத்தான்
இனிப்புப் பண்டமும் வாங்க வேண்டும்

10. அகப்பை திருவலை அருவமணை – அத்தான்
அத்தோடு அருவக் கத்தியையும்
நகம் வெட்டும் கட்டரும் வாங்க வேணும் - அத்தான்
நமக்கு அவையெல்லாம் தேவையென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. காதுக் குடும்பியும் வாங்க வேண்டும் - அத்தான்
காலுக்கு கொலுசும் வாங்க வேண்டும்
புது டிசைன் வூளும் கிளிப்போடு – அத்தான்
புடிச்சது எல்லாம் வாங்க வேண்டும்

12. பூனை கரடி புலிப்பொம்மை – அத்தான்
புதுப் புதுவிதமாய்த் தொப்பிகளும்
ஆனக்குட்டிப் பொம்மை அழகு அத்தான் - எனக்கு
அதையும் வாங்கித் தாருமத்தான்.

13. மிச்சர் முறுக்கு வடைவோழை – அத்தான்
மிளகாய் உறைக்கும் பொரிகடலை
பூஞ்சி மஸ்க்கட் துதள் மிட்டாய் - அத்தான்
தூளான செக்கு மிட்டாயும்

14. பதமாக வாங்கி எடுக்க வேண்டும் - அத்தான்
பக்கத்து வீட்டுக்கும் நாம்கொடுக்க
விதவிதமாக அத்தனையும் - சேர்த்து
விருப்பம் போல் நீயும் வாங்குமத்தான்

15. பெண்ணாப் பிறந்த உன் ஆசையெல்லாம் - பெண்ணே
போதாது போதாது என்பதுதான்
எண்ணம் நிறைவேறாவாங்குதற்கு – பெண்ணே
எங்கடியம்மா பணமிருக்கு

16. இருக்கிற காசோட வீட்ட போவோம் - பெண்ணே
இனிமேல் நீயொன்றும் கேட்காதே
விரும்பிய தெல்லாம் வாங்கியதால் - பெண்ணே
வீணாய்ப் போச்சடி பணமனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரைப் பற்றி...



இவர் எமது கல்முனைப் பிரதேசத்தில் பழம்பெரும் கிராமமான சேனைக்குடியிருப்பில் வைரமுத்து பாலாத்தை தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவர் கல்வி கற்றது ஆறாம் வகுப்பு வரையே. ஆனால் இளமையிலிருந்தே கலைநிகழ்ச்சிகளில் ஆர்வம் கொண்டு மேடை நாடகம்பலவற்றில்நடித்து மக்களின்பாராட்டைப்பெற்றுள்ளார்.

பின்னர் தாமே நாடகங்கள், வில்லுப்பாடல்கள், தெருக்கூத்து, நவீன நாட்டுக் கூத்து, கும்மி கோலாட்டம், கரகாட்டம், போன்றவற்றை எழுதி ஆலய உற்சவ காலங்களில் மேடையேற்றி மக்கள் மனதைக் கவர்ந்தவர்.

அதுமட்டுமல்ல, முத்துமாரியம்மன் பொன்னூஞ்சல். ஊர்வலக் கும்மிப் பாடல், கிட்டங்கி பிள்ளையார் பொன்னூஞ்சல், தசாவதாரப்பத்து, காவடிப்பாடல், காளியம்மன் காவியம், கும்மி பாடல், தசாவதாரப்பத்து, காவடிப்பாடல், சுனாமிக்காவியம் போன்ற பாடல்களும் மனித வாழ்க்கையோடு சம்மந்தப்பட்ட வாழ்க்கைச் சக்கரம், மயானப்பத்து, மோட்சப்பத்து, சீர்பாதகுல வரலாறு போன்றவைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். அனைத்து நூல்களையும் நான் வாசித்தேன். ஆனால் தற்போது அவர் எழுதிய திரௌபதியம்மன் ஆலயம் பற்றிய தாதன் கவுந்தன் வருகையும் தீப்பள்ளைய வரலாறும் என்னும் நூலை நான் படித்துப்பார்த்த பிறகுதான் அவரது ஆர்வம் எனக்கு விளங்கியது.

இவர் ஒரு நூலாசிரியர் மட்டுமல்ல சமய, சமூக சேவையாளர்.
இவரது பணி மென்மேலும் தொடர எனது உளமார்ந்த
நல்லாசிகளும் வாழ்த்துக்களும்.

**க. லவநாதன்**
பிரதேசசெயலாளர்,
பிரதேச செயலகம், கல்முனை (த.பி).



Golden Kalmunai. 067-2223939

**புனருத்தாரணம் செய்யப்படும் ஸ்ரீ திரௌபதி அம்மன் கோயில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org